பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 27 திங்கட்கிழமை 11.01.2021 கதிர் 67

இனி இது ரகசியம் அல்ல!

தேவையில்லாமல் பிரச்சினையைத் தாங்களே கிளப்பிவிட்டு, பின்னர் அல்லாடுபவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கப்படுவதுண்டு.

'அவளைத் தொடுவான் ஏன்? பின் அவஸ்தைப் படுவான் ஏன்?' - என்பதுதான் பக்கம்02

# நினைவுத்தூபி இடிப்புக்கு எதிராக வடக்கு - கிழக்கு இன்று முடங்கும்!

## ஹர்த்தால் போராட்டத்தை வெற்றியடையச் செய்யுங்கள் என்று தமிழ், முஸ்லிம் மக்களிடம் அரசியல் தலைவர்கள் கூட்டாக வேண்டுகோள்

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமையைக் கண்டித்து தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு – கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு சகல தமிழ், முஸ்லிம் மக்களும் தங்களால் முடியுமானளவு ஒத்துழைப்பை வழுங்கி அதனை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர் பக்கம் 02

## போர்க்காலச் சின்னம் பல்கலையில் எதற்கு?

### கோட்டா அரசு இப்படிக் கேள்வி

பல்கலைக்கழத்தில் எது இருக்கவேண்டும்? எது இருக்கக்கூடாது? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு உண்டு. இதை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. அந்தவகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ்.பல்கலைக்கழத்தில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருந்த போர்க்காலச் சின்னமான நினைவுத்தூபியை துணைவேந்தர் அகற்றியுள்ளார்.

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் பக்கம் 02

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீள அமைக்க ஒத்துழைப்பை கோருகின்றாராம் துணைவேந்தர்!

யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீளவும் அமைப்பதற்கு சகலதரப்பினரது ஒத்துழைப்பை கோரிநிற்கிறார் என யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். மாணவர்களின் உணர்வுடன் இசைந்தே துணைவேந்தரும் பயணிக்கின்றார் என்று கூறப்பட்டது.

அவ்வகையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை ஒரு அங்கீகரிக்கப்பட்ட நினைவுத் தூபியாக கட்டியெழுப்ப தயாராக உள்ளார் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் பக்கம் 02



## முன்னாள் பயங்கரவாதிகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றனர் யாழ்.பல்கலை மாணவர்கள்



### அமைச்சர் சரத் வீரசேகர புதிய கண்டுபிடிப்பு

பொதுமக்களை நினைவு கூரும் போர்வையில் தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றின் இறந்த பயங்கரவாதிகளை யாரும் நினைவுகூரவோ, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தவோ இடமளிக்கப்பட மாட்டாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் பல்கலைக்கழக பக்கம் 02

## கொரோனாத் தொற்றுக்கு நேற்றும் 540 பேர் இலக்கு!

இலங்கையில் நேற்றும் 540 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி தொற்றாளர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 380 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 44 ஆயிரத்து 618 பேருக்கு கொரோனாவின் மூன்றாவது பக்கம் 02

## விபத்தில் சிக்குண்டு இராணுவ வீரர் சாவு!

மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதான வீதியின் கதுறுவெலவை அண்மித்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த இராணுவ வீரர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை பக்கம் 11

## பல்கலையின் சுயாதீனம் பாதிப்பு அதன் ஆசிரியர் சங்கம் கவலை

இறந்தவர்களை நினைவு கூரும் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது கவலையினை பதிவு செய்துள்ளது.

இது தொடர்பில் நேற்றிரவு ஆசிரிய சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் –

எமது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமையப் பெற்றிருந்த இறந்தவர்களை நினைவு கூரும் நினைவுச் சின்னத்தினை கடந்த 08ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று பக்கம் 11

## மஹிந்தவின் செயலருக்கும் கொரோனா தொற்று உறுதி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கைகளுக்கான இணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகேவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்துக்குள் சென்றுள்ள அதேவேளை, அங்கு சபை முதல்வரின் அலுவலக ஊழியர்கள் சிலருடன் நெருக்கமான பக்கம் 02

## தமிழரின் மனங்களை உடையாதீர்; உறவுகளை நினைவுகூர ஏன் தடை?



### அரசிடம் மனோ கேள்விக்கணை

வடக்கு முழுக்க இராணுவ வெற்றிச் சின்னங்களை நிறுவிக்கொண்டு, மக்களின் போர் நினைவுச் சின்னங்களை அழிப்பது என்ன நியாயம்?

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- பக்கம் 02

## ரவூப் ஹக்கீமுடன் தொடர்புபட்ட 15 எம்.பிக்களுக்கு அறிவுறுத்தல்

### பி.சி.ஆர்.சோதனை, தனிமைப்படுத்தலுக்கு

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள ரவூப் ஹக்கீமுடன் தொடர்புகளை கொண்டிருந்த அடிப்படையில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது மேலும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அக் கேள்வி.

பல சமயங்களில் வினையைத் தேடிப் போய்ச் சம்பாதிப்பவர்களின் பாடு புலி வாலைப் பிடித்த கதையாகி விடுகின்றது.

அத்தகைய நிலைமைதான் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும்.

இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை சட்ட ரீதியாக அதே இடத்தில் அமைப்பதற்கான முன்முயற்சியைத் தாமே முன்னின்று ஆரம்பிப்பார் என்று கூறியிருக்கின்றாராம். நல்ல செய்தி. புத்தியுள்ள முடிவு.

ஆனால், விவகாரத்தை இவ்வளவு பிரச்சினையாக்கிய பிறகு அப்படி இந்த அரசைக் கொண்டு தம்மால் ஒரு நினைவு கட்டமைப்பைக் கட்ட வைக்க முடியும் என்று அவர் நம்புவது நடைபெறக் கூடியதா? சாத்தியமானதா? அல்லது இதுவும் 'உஷார் மடையன்' பேச்சுப் போன்றதா? தெரியவில்லை.

முள்ளிவாய்க்காலில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கான நினைவுத் தூபி ஒன்றை இனிமேலும் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் கட்ட வைக்க முடியுமென்றால் – அதற்கான ஆளுமை அவரிடம் இருக்கும் என்றால் – இப்போது தாம் களவாகவும், கரவாகவும், இருட்டிய பின்னரும், வளாகத்தை மூடி விட்டும் உடைத்த நினைவுத் தூபி, சட்ட முறையற்றது என்றால் அதனையே இடிக்காமல் சட்ட முறையாக்கியிருக்கலாம் அல்லவா?

அதைச் செய்ய முயலாதவர், செய்ய வக்கில்லாதவர், மீண்டும் தூபியைக் கட்ட முன்னின்று முயற்சிப்பேன் என்று கூறுவது, கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன கதைக்கு ஒப்பானதுதான்.

இந்தப் பிரச்சினையைத் தேவையில்லாமல் இந்த வகையில் தொடுவான் ஏன்? பிறகு இப்படி அவஸ்தைப்படுவான் ஏன்? – இது ஒன்றுதான் துணை வேந்தரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

★ ★ ★

நமது அரசியல் வட்டாரங்களில் முழு மும்முரமாக நேற்றிரவு அடிபட்ட செய்தி, சுமந்திரன் எம்.பியும் தனிமைப்படுத்தப்பட்டார் என்ற தகவல்தான். அப்படி என்னதான் நடந்தது?

கடந்த ஐந்தாம் திகதிதான் (செவ்வாய்க்கிழமை) அது நடந்தது. நாடாளுமன்றத்தில் காலை 10 – 11 மணியளவில் சூடான கஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பரிமாறுவர். அதைக் குடிப்பதற்கு நாடாளுமன்றக் கன்ரீனுக்குப் போகத் தேவையில்லை. சபை பிரதான மண்டபத்தில் இருந்து வெளியே 'லொபி'க்கு வந்தாலே போதும். அங்கு வைத்தே சுடச்சுட சிப்பந்திகள் அதனைப் பரிமாறுவர்.

அன்று எதிரும் புதிருமான கதிரைகளில் சாணக்கியன் எம்.பியும் சுமந்திரன் எம்.பியும் அமர்ந்து பேசியபடி சூடான இலைக்கஞ்சி குடித்துக் கொண்டிருந்தனர். அதனால் இருவர் முகத்திலும் மூக்கையும் வாயையும் மூடிக் கவசம் இல்லை.

அப்போது ஹக்கீம் அங்கு வந்தார். அவருக்கு இருக்க இடத்தை அளித்து விட்டு, சாணக்கியன் எழுந்து சென்றார். ஹக்கீமும் சுமந்திரனும் அமர்ந்திருந்தபடி கஞ்சி குடித்து விட்டுப் பிரிந்து சென்றனர்.

இது நடந்து ஓரிரு தினங்களுக்குப் பின்னர் ஹக்கீமுக்கு சற்றுக் காய்ச்சல். தொண்டை வலி.சேர்வு. சந்தேகம் அடைந்த அவர் பி.சி.ஆர். சோதனை செய்தார். நேற்றுக் காலை ஹக்கீமுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் தம்முடன் ஊடாடிய எல்லோரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எச்சரித்தார் ஹக்கீம். அந்த வரிசையில் சாணக்கியனையும் சுமந்திரனையும் கூட எச்சரிக்க அவர் தவறவில்லை.

எனினும் தாங்கள் நான்கு, ஐந்து அடி தொலைவில்தான் இருந்து பேசினார்கள், போதக்குறைக்கு அச்சமயம் மிகவும் சூடான கஞ்சி குடித்துக் கொண்டிருந்தார்கள் என்று இருவரும் தங்களுக்குள் தொலைபேசியில் பேசிக் கொண்டனர். அதனால் தொற்றுப் பரவ வாய்ப்பில்லை என்று திருப்திப்பட்டும் கொண்டனர்.

ஆனால் ஹக்கீமுக்குத் தொற்று என்று அறிந்ததும் நாடாளுமன்ற அலுவலர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத்துக்குள் ஹக்கீமின் நடமாட்டத்தை சி.சி.ரி.வி. கமாராக்களில் ஆராய்ந்தனர். அவருடன் நெருங்கிப் பழகிய ஒவ்வொருவரையும் எச்சரித்தனர். அந்த வகையில் சுமந்திரனுக்கும், சாணக்கியனுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்று 3.45 மணியளவில் சுமந்திரனுடன் தொடர்பு கொண்ட நாடாளுமன்ற அதிகாரிகள் அவருக்குத் தகவலைச் சொன்னார்கள். 'நீங்கள் இருவரும் பழகிய தூரம் பாதுகாப்பானதுதான். ஆனால் அச்சமயம் இருவருமே முகக் கவசம் அணிந்திருக்கவில்லை. அதுதான் சிந்திக்க வைக்கின்றது. எனவே எதற்கும் உங்களை ஒரு பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.' – என்று கூறப்பட்டதாம்.

அதனடிப்படையில் இன்று காலையில் பி.சி.ஆர். சோதனை செய்வதற்கு சுமந்திரன் ஒழுங்குபடுத்தியுள்ளார். இன்று மாலைக்குள் முடிவு தெரியும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் நாடாளுமன்றத் தகவலை வைத்துக் கொண்டு சுமந்திரனை இரண்டுவார காலம் அலையாமல் முடக்கம் செய்வதற்கான முயற்சியில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமையக இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னாண்டோ மும்முரமாக நேற்று ஈடுபட்டிருந்தார் என அறியவந்தது. – 'பிட்டுச் சாப்பிட்ட யாழ்ப்பாணத்தவர்களுக்கு பிட்ஸா கொடுத்தோம்!' என்ற தமது கூற்றை வைத்து நீதிமன்றத்தில் தம்மை ஒரு பிடிபிடித்தார் சுமந்திரன் என்ற கோபம் காரணமாக...!

சுமந்திரன் முடக்கப்படுவாரா அல்லது பிரசாத் பெர்னாண்டோவின் முயற்சி முடங்குமா என்பது இன்றைய பி.சி.ஆர். சோதனையில் தெரியவரும்தானே..!

பிந்திய தகவல் ஒன்று. நேற்றிரவு பத்து மணியளவில் பொலிஸார் மூலம் சுமந்திரனுக்கு ஒரு தகவல் துண்டும் சீட்டு மூலம் வாசித்துக் காட்டப்பட்டது. அதில் இன்றைய திகதி (11.01.2021) இடப்பட்டிருந்தது. கொழும்பில் தொற்றுக்குள்ளான ஹக்கீமின் தொடர்பாளர்களுள் சுமந்திரனும் ஒருவர் என்பதை இங்குள்ள பிரதேச சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கும்படி பொலிஸார் மூலம் அத்தகவல் அனுப்பப்பட்டிருந்தது. அவ்வளவுதான். அதிலகூட சுமந்திரனைத் தனிமைப்படுத்தும்படி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பொலிஸார் இந்தத் தகவலை நேற்றிரவு தெரிவிக்க முன்னரே, அது பற்றிய விடயத்தை நேற்று பிற்பகலே சுமந்திரன் தாமே யாழ்ப்பாணத்தில் தமது பிரதேச சுகாதார அதிகாரிக்குத் தெரியப்படுத்தித் தமக்குரிய பி.சி.ஆர். பரிசோதனையை ஒழுங்கு படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேச சுகாதார அதிகாரியும் நேற்றுப் பின்னேரமோ அல்லது நேற்றிரவோ சுமந்திரனுடன் தொலைபேசியில் பேசிய போது அவரைத் தனிமைப்படுத்தலில் இருக்கும்படி பணிக்கவில்லை. எனினும் இன்று காலை பி.சி.ஆர். சோதனை எடுத்து அதன் முடிவு வரும்வரை தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள சுமந்திரன் தீர்மானித்திருந்தார் எனத் தெரியவந்தது.

இன்று மாலைக்குள் முடிவு தெரியும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல். –

## ரவூப் ஹக்கீமுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ரவூப் ஹக்கீமுடன் தொடர்புபட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

## நினைவுத்தூபி இடிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறுபான்மை இனச் சமூகத்தை கிள்ளுக்கீரை யாக நினைத்துப் பந்தாட நினைக்கும் கோட்டாபாய அரசுக்கு சரியான பதிலடியை இந்தப் போராட்டத்தின் ஊடாக வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் சமூகங்களாக இலங்கைச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர். ஆகக்குறைந்தது உயிரிழந்தோரை நினைவு கூரவும், நல்லடக்கம் செய்யவும் சிறுபான்மைச் சமூகங்கள் மறுக்கப்படுகின்றன.

பௌத்த சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறினோம் என வீரவசனம் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசதரப்பினரும் இன்று அம்மக்களின் ஆதரவை இழந்து வருகின்றனர்.

உலகத்தில் வெறுக்கத்தக்க ஜனாதிபதியாகவும் அரசாகவும் இந்த ஆட்சி ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்தநிலையில் பௌத்த சிங்கள மக்களின் மனதை வெல்வதற்காகத் தமிழ் பேசும் மக்கள் மீதும், அவர்களின் உரிமைகள் மீதும், அவர்களின் அடையாளச் சின்னங்கள் மீதும் இந்த அரசு கைவைக்கத் தொடங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழத்தில் மாணவர்களால் நிறுவப்பட்ட நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை சிறுபான்மைச் சமூகத்தின் மன உணர்வுகளைச் கொச்சைப்படுத்தி அவமதிக்கும் அரசின் செயற்பாடாகும்.

அரசின் இந்த அடாவடித்தனத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் ஒற்றுமையாக நின்று இன்றைய ஹர்த்தால் போராட்டம் வெற்றியடைய முழுமையான ஆதரவை வழங்குவோம் – என்றனர்.

## முன்னாள் பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிர்வாகத்தால் அகற்றப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகமானது, ஒரு சமூகத்துக்கு மாத்திரம் சொந்தமான சொத்தோ, களமோ அல்ல என்றும், அது சட்டத்தை மதிக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் உரித்தானது என்றும் அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறந்த பயங்கரவாதிகளை நினைவு கூரும் சின்னத்தை பல்கலைக்கழக நிர்வாகம் இடித்துத் தரைமட்டமாக்கியதை தான் வரவேற்கின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை விட்டுத் தப்பியோடி, வெளிநாடுகளில் மறைந்து வாழும் முன்னாள் பயங்கரவாதிகளின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக தமிழ் மாணவப் பிரதிநிதிகள் செயற்படுகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பல்கலைக்கழக விவகாரங்களைக் கண்காணிக்கவே உபவேந்தர் இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், தமிழ் அரசியல்வாதிகள் யாழ்.பல்கலைக்கழக விவகாரங்களில் தலையிடுவதை உடன் நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## போர்க்காலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

போர்க்காலச் சின்னங்கள் பல்கலைக்கழகத்தில் எதற்காக நிறுவப்பட வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ். பல்கலைக்கழகத்தில் நினைவுத் தூபி உடைக்கப்பட்ட விவகாரத்தைத் தமிழ்க் கட்சியினர் தமது சுயலாப அரசியல் பிரசாரத்துக்குப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதற்கு மாணவர்கள் எவரும் துணைபோகக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்.

பல்கலைக்கழகம் ஒரு கல்விக்கூடம். சகல இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஒற்றுமையாகக் கற்கும் இடம். அங்கு அரசியலுக்கு இடமில்லை.

யாழ்.பல்கலைக்கழகம் ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கியது. கடந்த அரசின் காலத்திலும் அந்த எண்ணத்தில் சில மாணவர்கள் அங்கு செயற்பட்டார்கள். பல்கலைக்கழக வளாகத்தில் வைத்துப் விடுதலைப்புலிகளைப் பகிரங்கமாக நினைவேந்தினார்கள்.

அந்தக் காலம் மாதிரி இப்போதைய காலத்தை மாணவர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் எடைபோடுவது தவறானதாகும் – என்றார்.

## தமிழரின் மனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்.மாணவர்கள், ஊழியர்கள், உறவுகள் நினைவு கூர பல்கலைக்கழ பூமியின் உள்ளேயே நிர்மாணிக்கப்பட்ட நினைவுத் தூபியை உடைத்து அழித்ததன் மூலம், உயிர் வாழும் மற்றும் உயிர் இழந்த தமிழ் இலங்கையர்களை இந்த அரசு அவமானப்படுத்தி உள்ளது.

வடக்கு மாகாணம் முழுக்க எங்களுக்கு இராணுவத்தினரின் வெற்றித் தூபிகள் காணக்கிடைக்கின்றன. இராணுவத்தினரின் உருவங்கள் துப்பாக்கியைக் காட்டியபடி, உயர்த்தியபடி, ஆயுதங்களைக் காட்டியபடி இருக்கின்றன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணக் கிடக்கின்றன.

இந்தநிலையில் தமிழர்களின் போர் நினைவுச் சின்னங்களை மாத்திரம் அழிப்பதில் என்ன நியாயம் உள்ளது?

தெற்கில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் வயம்ப பல்கலைக்கழகத்திலும் அக்காலத்தில் ஆயுதப் போராட்டம் செய்த ஜே.வி.பி. போராளிகளின் நினைவுத்தூபிகள் இருக்கின்றன. அப்படியானால், ஏன் ஒருபுறம் மட்டும் ஒரு சட்டம்?

நான் இந்த அரசுக்கு ஒன்றை கூற விரும்புகின்றேன். தயவுசெய்து நாட்டில் இன்று இருக்கும் சட்டத்தையாவது ஒழுங்காக அமுல் செய்யுங்கள். எல்லோருக்கும் ஒரே சமத்துவமாக அமுல் செய்யுங்கள். தமிழருக்கு ஒன்று, சிங்களவருக்கு வேறொன்று, முஸ்லிம்களுக்கு இன்னொன்று என்று செய்ய வேண்டாம் என நாட்டில் பிளவுபடுத்த வேண்டாம். நாட்டைப் பிளவுபடுத்த வேண்டாம் என நாம் கூறுகின்றோம்.

தமிழ் மக்களின் மனங்களை உடைக்க வேண்டாம். நாம் கவலையடைந்துள்ளோம். மரணித்த எம் தாய்மார்கள், தந்தைமார்கள், சகோதர, சகோதரிகள், அண்ணன், தம்பிகள், தங்கைகள் ஆகியோரை நினைவுகூர எமக்கு முடியாதா?எமக்கு முடியாதா? – என்றார்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
துணைவேந்தர் மூத்த பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராசா தெரிவித்தார் என்று இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைப்பது தொடர்பான மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்குகிறார் என துணைவேந்தர் உறுதியளித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தமை தொடர்பில் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது,

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைக்க ஆரம்பப் புள்ளியாக இருந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க நான் தயாராகவே உள்ளேன். அதற்கு அனைவரது ஒத்துழைப்புகளையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

அதற்கான உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழக சமூகம் மட்டுமல்லாது தற்போது எழிச்சியுடன் நடைபெறுகின்ற போராட்டங்களில் ஈடுபடும் சமூக நலன்விரும்பிகள் மற்றும் அரசியல்வாதிகளும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் அடுத்த கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் எல்லா விடயங்களும், மேலிடத்து உத்தரவுகள் உட்பட வெளிப்படுத்தபடும்.– எனத் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொடர்புகளைப் பேணியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இதனால் அவருடன் தொடர்புகளைப் பேணியவர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற படைக்கலச் சேவிதர் தெரிவித்துள்ளார்.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அலையில் வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 41 ஆயிரத்து 325 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 826 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# எமக்கு தேவை யுத்த நினைவுதூபி அல்ல அமைதிக்கான நினைவுச் சின்னமே ஆகும்!

## பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

எமக்கு தேவைப்படுவது யுத்தத்தின் நினைவுதூபி அல்ல அமைதி ,சமாதானத்தின் நினைவுச் சின்னங்களேயாகும் எனத் தெரிவித்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இதற்காக தேவையான நடவடிக்கைகளை நாம் எமது மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து நினைவுத்தூபி அகற்றப்பட்டமை தொடர்பில் கடந்த சனிக்கிழமை தெளிவூட்டும் வகையில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் வருட காலப்பகுதியில் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் குழுவால் ஏதோ ஒரு நினைவுத்தூபியொன்று அதற்குள் கட்டியெழுப்புவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு அந்த நினைவுத்தூபியை அடிக்கடி மேம்படுத்தப்பட்டதான விடயத்தையும் அறியக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் உண்மையில் தெரிவிப்பதாயின், அது வடக்கு தெற்குக்கிடையிலான ஐக்கியத்துக்குத் தடையாக அமையக் கூடும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா இன்று இலங்கையிலுள்ள அருமையான திறமைமிக்க தலை சிறந்த உபவேந்தர். அத்தோடு மிகவும் திறமையான நிர்வாகி. சமீபகாலப்பகுதியில் நான் கண்ட திறமைமிக்க உபவேந்தர். அவர் தீர்மானமொன்றுக்கு வந்துள்ளார். அந்த நினைவுத்தூபி இன்றைய தினத்திற்கும், நாளைய தினத்திற்கும் பொருந்தாது என்பதால் அதனை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்குவதற்கான முடிவாகும் அது.

தற்பொழுது பல்கலைக்கழக கட்டமைப்பில் கற்கும் மாணவர்கள், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலப்பகுதியில் 9, 10 மற்றும் 11 வயதைக் கொண்டிருந்த எமது மாணவர்கள் ஆவர். தமிழ் , சிங்களம் அல்லது முஸ்லிம் எந்தவோர் இனத்துக்கு அல்லது மதத்திற்கு உட்பட்டவராக இருந்த போதிலும் இலங்கையர்களாகிய எமது பிள்ளைகள் இவர்கள்.

இதன் காரணமாக இன்று கூறுவதற்கு மகிழ்ச்சியடைகின்றோம் என்பது என்னவெனில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் சுமார் 1,500 பேர் கல்வி கற்கின்றனர். அத்துடன் தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஆகக் குறைந்த ரீதியில் 600 இற்கும் 700 இற்கும் இடைப்பட்ட தமிழ் மாணவர்கள் விசேடமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து வரும் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதில் எமக்குள்ள முக்கியத்துவமான விடயம் தான் எமது மாணவர்கள் மத்தியில் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பதாகும்..

இதன் காரணமாக எமக்கு முன்பிருந்த அந்த அனுபவங்களை எதிர்காலத்திலும் காண்பதற்கு ஏற்படாது என்பற்கு எமக்கு உள்ள ஒரே ஒரு காரணிதான் இந்த மாணவர்கள் மத்தியிலுள்ள ஐக்கியம் , சமாதானம் ஆகும். இவர்கள் இருப்பது பொதுவான சாதாரண விடுதிகளில் ஆகும். இவர்கள் கலந்துகொள்வது பொதுவான விரிவுரைகளிலாகும். இவர்களது விளையாட்டு நடவடிக்கைகள் போன்ற அனைத்தும் இடம்பெறுவது



பொதுவானதாகவே இடம்பெறுகிறது.

இதுவரையில் எந்தவொரு பிரச்சினையும் இந்த பல்கலைக்கழகத்தில் இடம்பெறாதிருப்பதற்கு மாணவர்களே பொறுப்பாக இருப்பது தொடர்பில் நாம் நாடு, இனம் என்ற ரீதியில் உண்மையிலேயே அதிஷ்டமான விடயமாகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் அவர்கள் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு இந்த நினைவுத் தூபியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று (கடந்த வெள்ளி) இரவில் இருந்து அகற்றப்படுகிறது. நான் நினைக்கும் வகையில் இது மிகவும் காலத்திற்கேற்ற நடவடிக்கையாகும். எமக்கு தேவைப்படுவது என்னவெனில் யுத்தத்தின் நினைவு தூபி அல்ல அமைதி சமாதானத்தின் நினைவுச்சின்னங்களேயாகும். இதற்காக தேவையான நடவடிக்கைகளை நாம் எமது மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதியின் உரையை மேற்கோளிட்டு பொலிஸ்மா அதிபருக்கு ஹரின் கடிதம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அம்பாறையில் ஆற்றிய உரை தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை அம்பாறை, உஹனவில் உள்ள லாத்துகல கிராமத்தில் இடம்பெற்ற ‘கிராமத்துடன் உரையாடல்’ நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றிய உரையானது தனது உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அமைந்துள்ளதாகவும் தனக்கு பாதுகாப்பை வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.




## வடக்கு, கிழக்கு தமிழ் முஸ்லிம்களை ஓரணியில் திரள ஆனந்தன் அழைப்பு

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு பூரண கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்க முன்வருமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமை தொடர்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்த மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தால் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் யுத்த காலத்தில் மரணித்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு கூட இந்த அரசாங்கம் தடை விதித்து அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது. அதன் நீட்சியாகத் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்கால் நினைவுத்தூபி இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் வடக்கு - கிழக்கு பகுதியைச் சேர்ந்த பல மாணவர்களின் தாய், தந்தையர்கள், சகோதரர்கள், உறவினர்கள் மட்டுமன்றி விரிவுரையாளர்கள் கூட முள்ளிவாய்கால் மண்ணில் மரணித்துள்ளார்கள். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை, தமிழ் மக்கள் மனங்களில் பாரிய காயங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு கல்விச்சாலை என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் அடையாளமும், உயிர் மூச்சும் ஆகும். தெற்கில் உள்ள ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஜே.வி.பியின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதற்குத் தடையல்ல. ஆனால் தமிழ் மக்கள் தமது பல்கலைக்கழகத்தில் தமது உறவுகள் நினைவாகத் தூபி அமைப்பதற்கு மட்டும்தான் தடையா..?

இந்த அரசாங்கம் ஒரு நாடு, ஒரு சட்டம் எனக் கூறிக் கொண்டு தெற்குக்கு ஒரு நீதியையும் ஒரு சட்டத்தையும் பயன்படுத்திக் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது. வடக்கு, கிழக்கில் வேறு சட்டமும் வேறு நீதியும் காணப்படுகின்றது.

கொவிட் - 19 தாக்கத்தால் மரணித்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களைக் கூட அடக்கம் செய்வதற்கு மறுத்து வரும் இந்த அரசாங்கம், தற்போது தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமையையும் மறுத்து வருகின்றது.

சட்டவிரோதமாக அமைத்த தூபியை அகற்றுவது என்றால், அதற்கு முன் சட்டவிரோதமாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெறும் குடியேற்றங்கள், காணி அபகரிப்புக்கள், பௌத்த மயமாக்கல், பௌத்த தூபிகளை நிறுவுதல், காடு அழிப்பு என்பவற்றை முதல் தடை செய்ய வேண்டும். அதனை நிறுத்த வேண்டும்.

தமிழர் பகுதிகளில் தமிழ் மக்களின் இன விகிதாசரத்தையும் நிலப்பரப்பையும் மாற்றியமைக்கும் வகையில் சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுக்கும் இந்த அரசாங்கம், நினைவுத்தூபியை அகற்றுவதற்கு மட்டும் புது வியாக்கியானத்தை கூறுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் யாழ் பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை இடித்து அழித்தமைக்கு எதிராக வடக்கு - கிழக்கு பகுதியில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள பூரண ஹர்த்தால் போராட்டத்துக்கு வர்த்தகர்கள், ஓட்டோ உரிமையாளர்கள், தனியார் பஸ்கள், உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு பூரண ஆதரவை வழங்கி இந்த அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக ஓரணியில் குரல் கொடுக்க முன்வர வேண்டும். -என அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாதிப்பில் பிறந்துள்ள ஒற்றுமை

பட்டறிவில் பாடம் படிக்காத சமூகம் தேறப்போவதில்லை. அழிந்தே போகும்.

இன்று இலங்கையில் அழிவு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் தத்தமது கடந்த காலப் படிப்பினைகளிலிருந்து – பட்டறிவிலிருந்து – அனுபவங்களைப் பெற்றுத் தேற முனைகின்றனர் என்பது திண்ணம்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை தமிழர்களும் சிங்களவர்களும் கிறிஸ்துவுக்கு முந்திய காலம் வரைச் செல்லும் தொன்மையான வரலாற்று வேரோடல்களை இந்த இலங்கைத் தீவில் கொண்டமைந்தவர்கள். எனினும் வரலாற்றுக் கால வோட்டத்திலே இலங்கைத் தீவு வேறு பல்லினப் பண்பாட்டு வடிவங்களையும் வரித்து, அரவணைத்து, இடமளித்துத் தனதாக்கிக்கொண்டது. அத்தகைய இனக் குழுக்களில் முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் விசேடமானவர்கள். அவர்கள் இந்தத் தீவிலே தனியான பண்பாட்டுக் கோலங்களை கொண்டு, தனித்துவமான இனங்களாக பல நூற்றாண்டுகள் நிலைத்து அமைந்தவர்கள்.

இதிலே மூன்று தரப்பினர் பெரும்பாலும் தமிழ்ப் பேசுகின்றவர்களாகவும் சிறுபான்மையினராகவும் விளங்குகின்றனர்.

தொன்மையான வரலாற்றைக் கொண்ட தமிழர்கள் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாகவும், அதேசமயம் தீவு முழுவதும் பரந்தும் நிலைத்துள்ளனர். மலையகத் தமிழர்கள் ஒருவகையில் இந்திய வம்சாவளியினர். எனினும் இலங்கைத்தீவில் சுமார் இரண்டரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் நிலைத்தவர்கள். முஸ்லிம்களும் தாங்கள் ஒரு தனித்துவமான இனக்குழுவினர் என்ற கூட்டுப் பண்பாட்டு உணர்வைத் தமது மதமான இஸ்லாமிடமிருந்து பெற்று பல நூற்றாண்டுகளாக இங்கு தனித்துவச் சிறப்புடன் தமது தனித்துவ வாழ்வியலை நிலைநிறுத்தியவர்கள்.

இந்த மூன்று தரப்பினரும் சிறுபான்மையினர் என்ற முறையில் இந்தத் தீவின் பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களப் பேரினவாதிகளினால் அடக்கி, ஒடுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு நிற்கின்றார்கள்.

இலங்கை அந்நிய கொலனித்துவ ஆதிக்க சக்திகளான பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலத்தை அடுத்து பேரினவாதிகளினால் முதலில் மோசமாக அடக்கி, ஒடுக்கப்பட்டவர்கள் நமது மலையகச் சகோதரர்கள்தாம். பத்து லட்சம் பேர் ஒரே நாளில் நாடற்றவர்களாக்கப்பட்டு, குடியுரிமை பறிக்கப்பட அந்த இனமே அடிமைப்பட்ட வாழ்வைச் சந்திக்க வேண்டியிருந்து. அந்த அவலத்திலிருந்து – பெரு வீழ்ச்சியிலிருந்து – அந்த இனம் மேலெழவில்லை. அதனால் அந்த இனத்துக்கு எதிரான அடக்குமுறை இப்போது மோசமான கட்டத்தில் இல்லை.

ஆனால் தனித்துவச் சிறப்போடும், வாழ்வியல் வசதிகளோடும், பிரிக்க முடியாத உரிமைகளோடும் இந்த மண்ணில் வாழ்ந்த மற்றைய இரு இனங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் இன்று இத்தீவில் விஸ்வரூபம் எடுத்து நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தால் மோசமாகப் பந்தாடப்படுகின்றார்கள்.

மற்றொரு சிறுபான்மையினமான வடக்கு, கிழக்குத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகத் தங்களையே ஈகம் செய்து சுதந்திரப் போராட்டங்களை நடத்திய போது – அதனை ஆயுத முனையில் குரூரமாகவும், கொடூரமாகவும் பேரினவாத ஆட்சியாளர்கள் அடக்கியபோது, அதற்குத் துணைபோனார்கள் முஸ்லிம்கள் – அதே அடக்குமுறை ஆட்சித்தத்துவம் நாளை தங்களுக்கு எதிராகவும் திரும்பும் என்ற அடிப்படை யதார்த்தம் கூடப் புரியாமலேயே. இப்போது பேரினவாத அடக்குமுறையின் வன்முறைக் கரங்கள் முஸ்லிம்களையும் வாரி அனைத்துக் காலாவதியாக்கும் தனது கொடூரத்தைத் தாராளமாகக் கட்டவிழ்க்கத் தொடங்கி விட்டது. அதன் கோர முகத்தை எதிர்கொள்ள முடியாது துடித்துத் துவள்கின்றது முஸ்லிம் இனம்.

பேரினவாதத்துக்கு எதிராக சிறுபான்மை இனங்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற வரலாற்றுப் பாடம், சிறுபான்மைத் தரப்புகளுக்கு இப்போதுதான் பட்டறிவாக நன்கு புரியத் தொடங்கியிருக்கின்றது.

கிழக்கு மாகாண சபையில் அதிகூடிய ஆசனங்களை எடுத்த தமிழ்க் கூட்டமைப்பு எந்த வித நிபந்தனையுமின்றி ஆதரவு தருகின்றோம், முழு அமைச்சுக்களையும் நீங்களே எடுத்து மாகாண அரசை அமைத்து, ஆட்சியைக் கொண்டு செல்லுங்கள் என்று தேர்தலில் மூன்றாம் இடத்துக்கு வந்த முஸ்லிம் காங்கிரஸுக்குப் பகிரங்க அறிவிப்பு மூலம் கூறியது. ஆனால் அந்த சகாயத்தைப் புறம் ஒதுக்கி விட்டு, சிங்களத்துடன் சேர்ந்து ஒட்டுக் கூட்டணி அரசு அமைத்து, அதில் தொங்கிக் கொண்டு காலத்தைக் கடத்தியது முஸ்லிம்களின் பிரதான கட்சியான முஸ்லிம் காங்கிரஸ்.

இன்று வடக்கு, கிழக்குத் தழுவிய ரீதியில் தமிழர்கள் முன்னெடுக்கும் கடையடைப்புக்கு முழு அளவில் ஆதரவு தர வந்திருக்கின்றனர் முஸ்லிம் சகோதர்கள். இதை நன்கு பற்றிப் பிடித்து, மீண்டும் தமிழ்ப் பேசும் சமூகமாக தமிழர்களும் முஸ்லிம்களும் எழுச்சி கொள்ள வேண்டும். இரு தரப்புத் தலைவர்களுக்கும் இந்தக் கோரிக்கை சமர்ப்பணம்.

# போரில் உயிரிழந்த பொது மக்களுக்காக பொதுவான ஒரு நினைவுத் தூபி வேண்டும்

### யாழ்.பல்கலை தூபி சுயலாப நோக்கிலானது என்கிறார் டக்ளஸ்



போரில் உயிரிழந்த மக்களுக்காக பொதுவான ஒரு நினைவுத்தூபி கட்டப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ்.பல்கலைக்கழக நினைவுத் தூபி சுயலாப நோக்கோடு அமைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

உரிய அனுமதி பெறப்படாமல் சட்டத்திற்கு முரணாக அமைக்கப்பட்ட காரணத்தாலேயே இந்தத் தூபி இடிக்கப்பட்டதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் கூறியுள்ளார்.

மேலும் நீண்ட காலத் திட்டமிடல் இன்றி குறுகிய காலச் சிந்தனையுடன் மேற்கொள்ளுகின்ற தீர்மானங்கள் எந்தளவு அவமானத்தையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் என்பதை இந்தச் சம்பவமும் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கான பொதுவான தூபி அமைக்கப்பட வேண்டும் என்று தனிநபர் பிரேரணை கொண்டு வந்தேன். இதன்போது தமிழ் பிரதிநிதிகளின் போதிய ஒத்துழைப்பு இன்மையால் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியவில்லை.

எனவே எதிர்வரும் அமைச்சரவையில் இந்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்க இருக்கின்றேன். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவுக்கு மத்தியில் வேலையற்றோர் அதிகரிப்பு!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் நாட்டில் வேலையற்றோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்குத் தீர்வாக புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான வேலைத் திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கைத்தொழில் மற்றும் முதலீட்டு சபையுடன் ஒன்றிணைந்து அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா ஒரு கைத்தொழிற்சாலையை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கிராமத்துக்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் குழுவின் கூட்டத்திலேயே நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச ரீதியில் தற்பொழுது எதிர்நோக்கப்பட்டுள்ள நிலைமைக்கு மத்தியில் இலங்கை பணியாளர்களை நாட்டுக்கு அழைப்பதற்கு அமைவாக புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தற்பொழுது இளம் தொழில் முயற்சியாளர்கள் ஒரு லட்சம் பேரை உருவாக்குவதற்காக ஒரு லட்சம் காணித்துண்டுகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இதன் முன்னேற்றங்களை எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் கண்டுகொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.

## எமது உணர்வு எமது உரிமை:

# ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க விநோநோகராதலிங்கம் அழைப்பு!

எமது உணர்வு எமது உரிமை. வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் முழுயான ஆதரவை வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் –

நாளை (இன்று) திங்கட்கிழமை வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களினதும் பூரண ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

அன்றைய தினம் கடைகளை அடைத்து தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செய்கின்ற அநீதிகளுக்கு நாம் அனைவரும் ஒருமித்த குரலாக எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் உடைக்கப்பட்டுள்ளமையானது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

அதைப்போல பல்வேறு விடயங்களில் சிறுபான்மை மக்களை இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக தாக்கிக்கொண்டு வருகின்றது. நாங்கள் எங்களுடைய எதிர்ப்பை இந்த இடத்தில் நிச்சயமாகத் தெரிவிக்க வேண்டும்.

அந்தவகையில் கடந்த காலத்தில் எங்களுடைய அரசியல் கருத்துக்கள் வித்தியாசமானவையாக இருந்தாலும். வடக்கு, கிழக்கில் வாழும் அனைவரும் ஒருமித்த குரலுடன் இந்த விடயத்துக்கு ஆதரவு தர வேண்டும்.

இது இந்த அரசாங்கத்துக்கு ஒரு தெளிவான பதிலை சொல்லும் ஒரு விடயமாக இருக்கும். இன்று கூட நான் பார்த்திருந்தேன். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சொல்லியிருந்தார் தனக்கு இரு பெயர்கள் உள்ளனவாம். ஒன்று – நந்தசேன மற்றையது – கோட்டாபய என இரண்டு பெயர்கள் உள்ளனவாம். இரண்டு பேரும் இரண்டு விதமாக இருப்பார்கள் எனக் கூறியுள்ளார்.

தான் கடந்த காலத்தில் நந்தசேன என்றவர் ஜனாதிபதி என்ற வகையில் நடந்து கொண்டவர், இனி வரும் காலங்களில் தான் விரும்பினால் கோட்டாபய என்ற பாதுகாப்பு செயலாளராக இருந்தவர்போல நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் சொல்லியுள்ளார்.

இது எல்லாம் எங்களை அச்சுறுத்தி, எங்களை அடக்குவதற்காக சொல்லும் விடயங்களாகவே காணப்படுகின்றது. இதற்கெல்லாம் நாங்கள் பயப்படக்கூடாது.

நாங்கள் ஒருமித்த குரலோடு இந்த விடயத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக முடிக்க வேண்டும். 11 ஆம் திகதி காலையில் அனைத்து கடைகளையும் அடைத்து வடக்கு, கிழக்கு முழுவதும் பூரணமான ஹர்த்தாலை கடைப்பிடித்து சர்வதேச சமூகம் மற்றும் அரசாங்கம் வரைக்கும் நாங்கள் எங்களுடைய நாட்டில் நடைபெறும் அநீதிகளுக்கு எதிராக சிறுபான்மை மக்களை அடக்க முடியாது என்ற செய்தியைச் சொல்ல வேண்டும். எமது உணர்வு 'எமது உரிமை' என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# வடக்கு - கிழக்கு மக்கள் அனைவரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மக்களையும் ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரியுள்ளார்.

கடந்த (சனிக்கிழமை) மாலை, விசேட காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இன்று (திங்கட்கிழமை) வடக்கு மற்றும் கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மக்களினதும் பூரண ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம். அன்றைய தினம் கடைகளை அடைத்து தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செய்கின்ற அநீதிகளுக்கு நாம் அனைவரும் ஒருமித்த குரலாக எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் உடைக்கப்பட்டுள்ளமையானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

அதேபோல பல்வேறு விடயங்களில் சிறுபான்மை மக்களை இந்த அரசாங்கம் தொடர்ச்சியாகத் தாக்கிக்கொண்டு வருகின்றது. நாங்கள் எங்களுடைய எதிர்ப்பை இந்த இடத்தில் நிச்சயமாகத் தெரிவிக்க வேண்டும்.

அந்தவகையில் கடந்த காலத்தில் எங்களுடைய அரசியல் கருத்துக்கள் வித்தியாசமானவையாக இருந்தாலும், வடக்கு - கிழக்கில் வாழும் அனைவரும் ஒருமித்த குரலுடன் இந்த விடயத்துக்கு ஆதரவு தர வேண்டும்.

கடந்த தேர்தலில், கடந்த காலத்தில் எங்களுடைய அரசியல் கருத்துக்கள், அரசியல் பின்னணிகள் வேறாக இருந்தாலும் கூட, இந்த விடயத்தில் எங்களுடைய அன்பார்ந்த, பணிவான ஒரே வேண்டுகோள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒருமித்த குரலாக இந்த ஹர்த்தாலை நடத்த வேண்டும். - என அவர் கூறியுள்ளார்.

## பாதாள உலகக் குழுவின் உறுப்பினரின் சகா கைது!

பாதாளகுழு உறுப்பினரான மொரட்டு சமன் என்பவரின் உதவியாளர் ஒருவரை வெளிநாட்டு கைக்குண்டு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

மொரட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபத்த பகுதியில் கடந்த சனிக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சோதனை நடவடிக்கைகளின் போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு மற்றும் 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்ட 40 வயதுடைய சந்தேக நபர், சில காலங்களுக்கு முன்னர் இனந்தெரியாத குழுவொன்றால் கொலைசெய்யப்பட்ட, பாதாளகுழு உறுப்பினரான மொரட்டு சமன் என்பவரின் உதவியாளராகச் செயற்பட்டவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் ஏதேனும் அனர்த்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்தக் கைக்குண்டை வைத்திருந்தாரா என்பது தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர் மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், மொரட்டுவ பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## கடற்படையைச் சேர்ந்த 6 பேருக்கு கொரோனா!

தெற்கு கடற்படை முகாமில் கடற்படையைச் சேர்ந்த 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. காலி மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

கடற்படை வீரர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட ரபிட் அன்டிஜன் பரிசோதனையின்போதே கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இனங்காணப்பட்ட மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 840 ஆகும்.

இவர்களில் 40 ஆயிரத்து 838 தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர். இதனையடுத்து, 6 ஆயிரத்து 539 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை தொற்று அறிகுறிகளுடன் சந்தேகத்தினடிப்படையில் 723 தொற்றாளர்கள் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர் என சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

## இராஜாங்க அமைச்சர் தயாசிறியின் பிரத்தியேக செயலருக்கும் தொற்று!

### 118 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் அவரின் பிரத்தியேக செயலாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிப் பழகிய 118 பேரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதாவது, தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிப் பழகிய சமயப் பெரியார்கள் ஐந்து பேர் உட்பட ஹெட்டிப்பொலவிலுள்ள அலுவலகத்துக்கு மக்கள் சந்திப்பு தினத்தன்று சமூகமளித்த 75 பேரே இவ்வாறு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அமைச்சரின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வளிமண்டலத்தில் கீழ் மட்ட தளம்பல் மழையுடனான காலநிலை அதிகரிக்கும்

இலங்கைக்கு தென்கிழக்காக வளிமண்டலத்தில் ஏற்பட்ட கீழ் மட்ட தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழையுடனான வானிலை அடுத்த சில நாள்களுக்கு சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மி. மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.







காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் பண்பாட்டு விழுமிய அடையாளமான யாழ் பல்கலைக்கழகத்தைச் சிதைக்க முற்படாதீர்!

## துணைவேந்தருக்கு சுரேஷ் க.பிறேமச்சந்திரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் இரண்டறக் கலந்தது. அதன் மாண்பினை கெடுக்கும் வகையிலான செயற்பாடுகள் அனைத்தும் தமிழ் மக்களை அவமதிக்கும் செயலாகவே அமையும் என்றும் இத்தகைய செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இரவு யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடித்ததைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

யாழ் பல்கலைக்கழகம் வெறுமனே பட்டதாரிகளை உருவாக்கும் கல்வி நிறுவனம் மட்டுமல்ல. அது தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற இடமுமாகும். அதுமட்டுமன்றி தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தின் சாட்சியாகவும் அதன் பரிணாம, பரிமாண வளர்ச்சியோடும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்ற அறிவுசார் செயற்பாட்டுக் களமுமாகும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துடன் யாழ் பல்கலைக்கழகம் இரண்டறக் கலந்து பணியாற்றி வந்துள்ளமையை அனைவரும் அறிவர்.

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்ட வேளையில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவுகூர்வதற்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை கடந்த வெள்ளிக்கிழமை இரவு இரகசியமாக இடித்துத் தரைமட்டமாக்கியதன் மூலம் யாழ் பல்கலைக்கழகத்தின் மாண்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பொங்குதமிழ் நிகழ்வை முன்னின்று நடத்தியவர் என்று பெருமை பேசிய துணைவேந்தரே அந்த நினைவுத்தூபியை இடிப்பதற்கு முன்னின்று செயற்பட்டிருப்பது மிகவும் கவலையளிக்கிறது.

பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் தங்களது அன்பிற்கினிய உறவுகளை நினைவு கூர்வதற்காகக் கட்டிய நினைவுத்தூபியை இடித்ததன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் எத்தகைய பலனை அடைய நினைக்கின்றனர் என்பது தெரியவில்லை. இதனை இடித்ததைவிட அதற்கான காரணத்தை முன்வைக்கும் உபவேந்தரின் கருத்துகள் முன்னிற்குப் பின் முரணாக இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது.

சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து அறிவுறுத்தல் வந்திருப்பதாகவும் தனக்கு மேலிடத்திலிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் மாறுபட்ட கருத்துகளை துணைவேந்தர் கூறியிருக்கிறார்.

பல்கலைக்கழக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு செனட் சபை என்ற அமைப்பு இருக்கிறது. மாணவர் அமைப்பு இருக்கிறது. விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பதிவாளர், நிதியாளர் போன்று பலதரப்பட்டவர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவருடனும் கலந்துரையாடி ஒரு சரியான முடிவை எடுத்துச் செயற்பட்டிருந்தால் யாருக்கும் எதுவித சந்தேகமும் வரப்போவதில்லை. ஆனால், ஒருவருடனும் கலந்துரையாடாமல் இரவோடு இரவாக தன்னிச்சையாகச் செயற்பட்டு அந்த நினைவுத்தூபியை இடிக்க வேண்டியதன் அவசியத்தை உபவேந்தர் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று கோருகிறோம்.

ஒரு சட்ட விரோத கட்டுமானத்தை அகற்ற வேண்டும் என்று தீர்மானித்தால் அதனை பகல்வேளையில் பகிரங்கமாகச் செய்திருக்கலாமே. அதனைவிடுத்து இரவோடிரவாக அதனை இடிக்க வேண்டியதன் அவசியமென்ன? இதுவரை உபவேந்தர் பதவியில் இருந்த எவரும் செய்யாத ஒரு செயலை இந்த உபவேந்தர் செய்திருப்பது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை அவமதித்துள்ளது. உபவேந்தரின் இந்தச் செயலை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவரது தன்னிச்சையான இச்செயலை நாம் கவலையுடன் கண்டிக்கிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் அனைத்துவித நடவடிக்கைகளுடனும் இரண்டறக் கலந்துள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மட்டுமன்றி சர்வதேச நாடுகளின் அரச ஒழுங்குமுறைகளையும் கண்காணித்து, ஆய்வுக்குட்படுத்தி, ஜனநாயக




விழுமியங்கள் மனித உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதனை சுட்டிக்காட்டி, அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய விதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செயற்பட்டு வந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கடந்தகால வரலாற்றை உபவேந்தர் கேட்டறிந்துகொள்வது இனிவரும் காலத்திற்கு நல்லது. உலகத்தின் ஜனநாயக விழுமியங்களை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தைக் கற்றுக்கொடுக்கும் ஒரு கல்விசார் நிறுவனத்தின் நிர்வாகம் தன்னிச்சையான எதேச்சாதிகாரமான முடிவினை மேற்கொள்வது நியாயமா என்ற கேள்வியையும் தமிழ் மக்களின் சார்பாக கேட்க விரும்புகிறோம்.- என்றுள்ளது.

# தமிழர்களின் வரலாறுகளைத் திரிவுபடுத்தி அடுத்த சந்ததிக்கு கற்பிக்க அரசு முயற்சி!

## மட்டு. மாநகர முதல்வர் சரவணபவன் காட்டம்



தமிழ் இனத்தின் அடையாளங்களைச் சிதைக்கும் நடவடிக்கைகளின் ஊடாக அடுத்த சந்ததியினருக்கு திரிவுபடுத்தப்பட்ட வரலாறு ஒன்றைக் கற்பிக்க இந்த அரசாங்கம் முயல்வதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் தூபி அழிக்கப்பட்டமையானது ஓர் அடாவடித்தனமான செயல் எனவும் அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்ட சம்பவத்திற்கு அவர் நேற்று (சனிக்கிழமை) வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் -

அனுமதியில்லாமல் கட்டப்பட்ட எத்தனையோ நினைவுச் சின்னங்களும், இலங்கை இராணுவத்தின் அடையாளங்களும் இலங்கையில் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அதிலும், ஜே.வி.பி. கலவரத்தால் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத் தூபிகளும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறிருக்க, யுத்தத்தால் உயிர் நீத்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு அல்லது நினைவுச் சின்னங்களை அமைத்து அஞ்சலி செலுத்துவதற்கோ உள்ள அடிப்படை மனித உரிமைகளைக் கூட இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க மறுக்கிறது.

இதை இந்த அரசாங்கத்துக்கும், அது சார்ந்த கட்சிகளுக்கும் வாக்களித்த மக்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

அபிவிருத்தி என்னும் போர்வையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் கூட எதிர்கால சந்ததியினர் அறியக்கூடாது என்பதற்காக இடித்து அழித்திருந்தார்கள். தமிழர்களுக்கு அபிவிருத்திதான் முக்கியம் என்று அரசாங்கத்தின் கைக்கூலிகள் சிலர் இந்த அழிப்புகளுக்குத் துணையாகச் செயற்பட்டனர் எனவும் -

தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அபிவிருத்தி என்னும் மாயையால் சரி செய்து விட முடியாது என்றும் உயிர் வாழும் தமிழரை மட்டுமல்ல, உயிரிழந்த தமிழரையும் இன்றைய இலங்கை அரசு, இலங்கையராகக் கருத மறுத்து நிற்கிறது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நினைவுத்தூபிஅழிக்கப்பட்டமைக்கு இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கண்டனம்!



யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நினைவுத்தூபி அழிப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி என்பது பலியான சகோதர சிவில் தமிழ் உறவுகளை நினைவூட்டும் ஆத்மார்த்த மனிதாபிமான சின்னம்.

அது பயங்கரவாதம் சார்ந்த அல்லது படையினரை சாடுகின்ற குறியீடு அல்ல.

தென்பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் கூட கடந்த கால அரச எதிர்ப்பு கிளர்ச்சிகளில் பலியானவர்களுக்கான நினைவுத்தூபிகள் உள்ளன.

ஆகவே யாழ்.பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது.

இத்தகைய அரசின் இனவாதம் சார் செயல்பாடுகள் ஒருபோதும் நாட்டில் அமைதியை, அபிவிருத்தியை ஏற்படுத்த வழிசமைக்க மாட்டாது.

கடந்த கால வரலாற்றில் அரசு எந்த பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே இந்த நினைவுத்தூபி இடிப்பு, முஸ்லிம்களின் உடல்கள் எரிப்பு போன்ற இனவாதம் சார் அரச செயல்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அரசின் பொறுப்பற்ற, இனங்களுக்கிடையே பிரிவினையை வளர்க்கும் செயல்பாடுகளை ஒரு பொறுப்புள்ள அரசியல் பிரதிநிதி என்றவகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=



கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778



# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

“கொரனோ வைரஸ் தாக்கம் குறைந்து, கல்விக்கூடங்கள் மீண்டும் திறக்கப்படும் போது, இணையவழி கல்வி சோர்வடையுமா? இணையவழி தொழில்நுட்பத்துடனான எங்கள் காதல் கலைந்து போகுமா? வெப்கேம் வழியாக தொடர்ந்து கல்வி தொடருமா? அல்லது இணையவழிக் காண்பியக்கக் கற்கை நிரந்தரமாக ஊமையாக வாய்ப்புள்ளதா? என்ற கேள்விகள் எழும்.

02

**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கொவிட் - 19 வைரஸ் தொற்று நோயால் உலகெங்கிலும் அலுவலகங்கள், கல்விக்கூடங்கள, வணிகச் செயற்பாடுகள் மீள்கட்டமைக்கப்பட்டன. ‘வீட்டிலிருந்து வேலை - வீட்டிலிருந்து கல்வி’ என்ற எண்ணக்கரு உருவாகியது. மனிதர்கள் நேருக்கு நேர் சந்திக்க முடியாத போது, ஒன்று கூடமுடியாத போது, தூரத்திலிருந்தபடி ஓரிடத்தில் ஒன்றுகூடத் தொடங்கினார்கள். அதற்கான வாய்ப்பாக மெய்நிகர் தளம் அமைந்தது. இது சூழ்நிலையின் கட்டாயத்தால் நிகழ்ந்தது. ஆனால், அது இன்று வாழ்வின் ஓர் அம்சமாக அமைந்து விட்டது. குறிப்பாக, கொவிட் - 19, வேலைதளங்கள் மற்றும் கல்வியுலகை மாற்றியமைத்து வருகிறது. ஆனால், இதுவே கல்வித்துறை எதிர்காலமாக அமையவும் வாயப்பாகிறது. கொரனோ வைரஸ் தாக்கம் குறைந்து, கல்விக்கூடங்கள் மீண்டும் திறக்கப்படும் போது, இணையவழி கல்வி சோர்வடையுமா? இணையவழி தொழில்நுட்பத்துடனான எங்கள் காதல் கலைந்து போகுமா? வெப்கேம் வழியாக தொடர்ந்து கல்வி தொடருமா? அல்லது இணையவழிக் காண்பியக்கக் கற்கை நிரந்தரமாக ஊமையாக வாய்ப்புள்ளதா? என்ற கேள்விகள் ஒரு பக்கம் இருக்க, மெய்நிகர் வகுப்பறை மாணவர்களைக் கவர்ந்திழுப்பதற்கு எவ்வாறான வசதிகளைக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

பொதுவாக, மெய்நிகர் வகுப்பறை ஒரு மென்பொருளை அடிப்படையாகக் கொண்டது. மென்பொருள் பயனர்கள், அதாவது ஏதோவொரு மென்பொருளில் இணைபவர்களே மெய்நிகர் வகுப்பறையை உருவாக்க முடியும். இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முதலில் நுட்பியல் அவத்தைக்குள் நுழைய வேண்டும்.

மாணவர்கள் - ஓர் இணைவழி வகுப்புப்பில் இணைவதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் மென்பொருளை முதலில் பதிவிறக்கம் செய்ய வேண்டும். தமது சிமாட் தொலைபேசி, மடிக்கணனி போன்றவற்றில் இதனைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும். அல்லது இணைய உலாவி வழியாகவோ அந்த மென் பொருள் ஊடாக வகுப்பில் சேர முடியும். இவ்வாறு இணைவதனூடாக நேரடிக் கற்ப்பித்தலை சமநேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இணைய இணைப்பு கிடைக்கக் கூடிய இடத்திலிருந்து மெய்நிகர் வகுப்பறையில் மாணவர்கள் இணையமுடியும். இதற்காக, குறிப்பாகக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பயன்பாட்டிற்காக மென்பொருள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன, அதே வேளை பல தேசியக் கொம்பனிகளின் வணிகத் தேவைக்காகவும் மென்பொருள்கள் காணப்படுகின்றன. மெய்நிகர் வகுப்பறையை உருவாக்கக்கூடிய மென்பொருள்கள் பல வசதிகளை நாளாந்தம் மேம்படுத்தி வருகின்றன, அவற்றை விரிவாகப்பார்க்கலாம்.

### மெய்நிகர் வகுப்பறையின் அம்சங்கள்

#### வீடியோ காட்சித் தொடர்பு

மெய்நிகர் வகுப்பறையை உயிர்ப்புள்ளதாக்குவது நேரடி வீடியோ காட்சித் தொடர்பாகும். இது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கற்பித்தலின் போது ஒருவரை ஒருவர் பார்க்க அனுமதிக்கிறது, மேலும் மாணவர் ஈடுபாட்டையும் நிகழ்நேர விவாதங்களுக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டியது வீடியோவின் துல்லியமான துலங்கல். இணை உலாவிகளில் காணப்படும் சில மென் பொருல்களில் அதாவது சில இயங்குதளங்கள் மட்டுமே உயர் - வரையறை வீடியோவை வழங்குகின்றன மற்றும் குறைந்த அலைவரிசை இணைப்புகளைக் கொண்ட பயனர்கள் பங்கேற்க உதவும் வகையில் பயனரின் வீடியோ மற்றும் ஓடியோவை அவற்றின் இணைப்பு வேகத்திற்காக தானாக மாற்றமடையக்கூடியதாகவும் காணப்படும். இதனால் காட்சிகள் மங்கலாகக் காணப்படுவதும் தெளிவாகக் காணப்படுவதையும் காணமுடியும்.

#### குறியாக்கம், கடவுச்சொல் பாதுகாப்பு

வீடியோ காட்சி வகுப்பறைகளில் உள்நுழைவதற்கு மாணவர் ஒருவருக்கு கடவு சொல் குறியாக்கம் தேவையாகும். இது இணையவழிப் பயன்பாட்டில் பயனர்களுக்கான தனியுரிமை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிறது, அதே நேரத்தில் கடவுச்சொற்கள் ஒரு வகுப்பு அமர்வை அணுகக்கூடியவர்களைக் கட்டுப்படுத்துகின்றன. கடவுச்சொல் இன்றி திறந்த இணைப்புள்ள மெய்நிகர் வகுப்பறையில் இணைய உலாவியான யாரொருவரும் இணைந்து கொள்ள முடியும். அவ்வாறு நடந்தால் அது ஒரு பொது வெளியில் நடக்கும் கூட்டம் போன்றதாக இருக்கும். வகுப்பறையின் பண்பாக இருக்காது. இதனால் பிரத்தியேகமாகக் கற்கிறோம் என்ற எண்ணம் கற்கின்ற மாணவர்களுக்கு ஏற்படாது. இதனால் ஓர் இணையவழி வகுப்பறைக்கு, அதாவது மெய்நிகர் வகுப்பறைக்கு குறியாக்கமும் கடவுச்சொல்லும் அவசியமாகிறது. அதன் வழியே தான் மாணவர்கள் மெய்நிகர் வகுப்பறைக்குள் உள்நுழையலாம்.

#### பல்லூடக விளக்கக்காட்சிகள்

ஆசிரியர்கள் ஸ்லைடு விளக்கக்காட்சிகளை மெய்நிகர் வகுப்பறை தளங்களில் பதிவேற்றலாம், பின்னர் அந்த ஸ்லைடுகளை ஒரு பாடத்தின் போது மாணவர்களுக்கு கற்பித்தல் உதவியாகக் காண்பிக்கலாம். கற்பித்தலின் காட்சி உதவியாகப் பகிரலாம். பல மென்பொருள் தளங்கள் ஆசிரியர்கள் தமது குரல் பதிவுகளை, இசையை, வீடியோ கோப்புகளை பதிவேற்ற உதவுகின்றன.

#### வெள்ளைப் பலகை

எமது பண்பாட்டில் வகுப்பறையென்றாலே நினைவில் வருவது கரும்பலகைதான், கரும்பலகையில்லாது வகுப்பறை இல்லையெனலாம். ஆனால் அண்மைக்காலங்களில் வகுப்பறைகளில் கரும்பலகைக்குப்பதிலாக பச்சைப் பலகை, வெள்ளைப்பலகை பயன்படுத்தும் பழக்கம் காணப்படுகின்றது. நிறங்கள் மாறினாலும் ஒரு வகுப்பறையென்றால் கரும்பலகையோ அல்லது வெள்ளைப்பலகையோ இருக்க வேண்டும் என்பதான மனப்பதிவு காணப்படுகின்றது. இதனால் மெய்நிகர் வகுபறையிலும் இந்த வெள்ளைப் பலகை வசதியை மென்பொருள் தளங்கள் வழங்குகின்றன.

வெள்ளைப் பலகை (ஒயிட் போர்டுகள்) ஒரு கணித சிக்கலைத் தீர்ப்பதற்கான படிகளை நிரூபிக்க அல்லது ஓர் உயிரினத்தின் கட்டமைப்பை விளக்குவதற்கான வரைபடத்தை வரைவதற்கு உதவுகிறது. வெள்ளைப் பலகையை ஆசிரியர்கள் பல்வேறு வழிகளில் பயன்படுத்தலாம். சில மென்பொருள் தயாரிப்புகள் கூட்டு ஒயிட் போர்டுகளை வழங்குகின்றன, இதில் மாணவர்களும் ஆசிரியர்களும் பகிர்ந்து கொள்ள உதவுகிறது, இது மாணவர்களின் பங்கேற்புக்கு அதிக வாய்ப்பையும் வழங்குகிறது.

#### உரை அரட்டை

உரையாடல் இல்லாது வகுப்பறை இல்லையெனலாம், இதனை மெய்நிகர் வகுப்பறைகளிலும் அனுபவிக்கும் வசதிகள் உட்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியரின் காட்சி மற்றும் ஒலித்தொடர்புக்கு மேலதிகமாக, ஓர் உரை அரட்டை அம்சமும் மெய்நிகர் வகுப்பறையில் உள்ளது. மாணவர்கள் அமைதியாகக் கேள்விகளைக் கேட்க அல்லது ஓர் அமர்வின் போது ஆசிரியருடன் தொடர்பு கொள்ள கேள்வி கேட்க இந்த வசதி உதவுகிறது.

#### கோப்பு பகிர்வு

கோப்புக்களை பகிர்வதற்கான வாய்ப்புக்களும் மெய்நிகர் வகுப்பறையில் காணப்படுகின்றன. இவற்றை சேமித்து வைத்துத் தேவையான நேரங்களில் ஆசிரியர்கள் பயன்படுத்த முடியும். மாணவர்களுக்குப் பயன்படும் ஆவணங்கள், வீடியோ, ஒடியோ மற்றும் விளக்கக்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு கோப்பு வகைகளை இதில் பதிவேற்றம் செய்யலாம். இந்தக் கோப்புகளைப் பின்னர் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். சில தயாரிப்புகள் நூலகத்தை உருவாக்கும் வசதிகளை வழங்குகின்றன, இது பயிற்றுவிப்பாளர்கள் கோப்புகளை ஒழுங்கமைக்க மற்றும் கோப்புகளை மீண்டும் பயன்படுத்த அல்லது கடந்த வகுப்புகளிலிருந்து பாட உள்ளடக்கத்தை பயன்படுத்த உதவுகின்றன. இது ஆசிரியர்களுக்கான உசாத்துணை நூல்களை வழங்கும் வாய்பபை உருவாக்கிக் கொடுக்கின்றன. இந்த வசதிமூலம் மாணவர்களின் கற்றல் வாய்ப்புக்கள் விரிவாகியிருப்பதையும் கவனிக்கலாம்.

#### திரைப் பகிர்வு

இது இணையவழிக் கருத்தரங்கு மாநாடு போன்றவற்றில் அதிகம் பயனுள்ள விடயமாகும். பயிற்றுநர்கள் (மற்றும் சில நேரங்களில் அமர்வு பங்கேற்பாளர்கள், பயிற்றுவிப்பாளரின் அனுமதியுடன்) ஒரு அமர்வின் போது தங்கள் கணினித் திரையைப் பகிரலாம். ஒரு பயிற்றுவிப்பாளர் ஒரு மென்பொருளை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விளக்கங்களுக்கு ஒரு செயலை விவரிப்பதற்கான செயல்முறையை விளக்குவதற்கு நிரூபிக்க முயற்சிக்கும்போது இந்தத் திரைப் பகிர்வு பயனுள்ளதாக இருக்கும்.

#### வாக்கெடுப்புகள் மற்றும் கணக்கெடுப்புகள்

மெய்நிகர் வகுப்பறையில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டு நேரடி வாக்கெடுப்புகள் மற்றும் கணக்கெடுப்புகள் மூலம், மற்றும் உடனடியாக முடிவுகளைக் காணலாம்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்புக்கு உலகநாடுகள் கண்டனம் தெரிவிக்கவேண்டும்!



அனந்தி கோரிக்கை

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமைக்கு எதிராக உலக நாடுகள் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் அனந்தி சசிதரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, இரவில் இடித்து அழிக்கப்பட்டிருப்பது ஒட்டுமொத்த தமிழர்களின் மனங்களையும் காயப்படுத்தி இருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழமானது சுயாதீனமான,சுயநிர்ணயத்துடன் கூடிய அமைப்பாகத்தான் இருந்து இருக்கின்றது.

எனவே இந்த இடத்தில் அங்கீகாரம் இல்லாத கட்டடம் அழிக்கப்பட்டது என்று துணைவேந்தர் கூறியுள்ள கருத்தை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

யாழ்.பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, இறுதி யுத்தத்தில் எத்தனையோ மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

அத்துடன் முள்ளவாய்க்காலில் குடும்பம் குடும்பமாக கூட கொல்லப்பட்டார்கள். இன்று அவர்களின் உறவுகள் இங்கு கல்வி பயிலுகின்றார்கள்.

இந்நிலையில் தங்களது உறவுகளை நினைவு கூருவதற்கு யாழ்.பல்கலைக்கழத்தில் இந்த நினைவுத்தூபியை கட்டியிருந்தார்கள். இந்த நினைவுத் தூபி, அவர்களின் மனங்களில் இருக்கின்ற காயங்களை ஆற்றுப்படுத்துகைக்கு கொண்டு வந்திருக்கும்.

இவ்வாறு அவர்களின் நினைவு கூரலுக்கு கூட அங்கீகாரம் வழங்காதமை கண்டனத்துக்குரிய விடயமாகும். ஆகவே, உலக நாடுகளும் இந்த விடயத்திற்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலைக்கழகம் சமூகத்துடன் இணைந்துதான் இயங்க வேண்டும்

### புறந்தள்ளி மமதையுடன் செயற்பட முடியாது பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

பல்கலைக்கழகமானது சமூகத்துடன் இணைந்து இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நாம் சமூகத்தை புறந்தள்ளி மமதையுடன் செயற்பட முடியாது - இவ்வாறு யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

எமது பல்கலைக்கழகத்தில் 08.01. 2021வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற, இறந்தோர் நினைவுச் சின்னம் இடித்த கற்றப்பட்டமை அதிர்ச்சி தரும் விடயமாகும். இந்த சம்பவத்தை தொடர்ந்து சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ள உணர்வலைகளை நாம் ஆழமாக புரிந்து கொண்டுள்ளோம்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றுவதற்கு விடுக்கப்பட்ட பணிப்புரை வெளிப்படையான முறையில், பரவலான கலந்தாலோசனை மூலம் அணுகப்பட்டிருக்க வேண்டுமென நாம் கருதுகின்றோம். இந்தப் பணிப்புரை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தரால் பணிக்கப்பட்டவர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளனர்.

அன்றைய இரவில் பல்கலைக்கழகத்தை சார்ந்தவர்கள் குறிப்பாக எமது அங்கத்தவர்கள் எவராவது மனித நேய உணர்வாளர்களை புண்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருந்தால் நாம் மக்களிடம் மன்னிப்பு கோரவும் கடமைப்பட்டுள்ளோம்.

பல்கலைக்கழகமானது சமூகத்துடன் இணைந்து இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நாம் சமூகத்தை புறந்தள்ளி மமதையுடன் செயற்பட முடியாது. இது தொடர்பில் இன்று (11.01.2021) திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய நிலையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண வழமை மறுப்பிற்கு எமது பரிபூரண ஆதரவையும் வழங்குகின்றோம்.

எனினும் பல்கலைக்கழகத்தில் பரீட்சை கடமைகளிலும் அதனுடன் இணைந்த கடமைகளிலும் ஈடுபடும் ஊழியர்களை பரீட்சைகள் இடம்பெறுமாயின் அதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம். - என்று உள்ளது

### முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிப்பு:

## மாணவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக இந்துக் கல்லூரி மாணவனும் இணைவு!

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் நிர்வாகத்தால் இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டமைக்கு கண்டனம் வெளியிட்டும் கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனும் இணைந்துகொண்டார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு வெளிப்புறத்தில் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைக்க அனுமதிக்க வேண்டும், பல்கலைக்கழக வளாகத்தைவிட்டு பொலிஸார், இராணுவத்தினர் விலகவேண்டும் ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தே மாணவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம், பல்கலைக்கழக நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் வெள்ளி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே மாணவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் இன்று திங்கட்கிழமை முழு கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நினைவிடங்கள் வெறும் கற்சுவர்கள் அல்ல தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவிடம் உரிமைகள் மறுக்கப்பட்டு கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம உறைவிடம். அது அழிக்கப்பட்டமை கடும் கண்டனத்துக்கு உரியது.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் காட்டமான கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

இதனை அமைத்தவர்கள் ஆர்வக் கோளாறானவர்கள் எனத் துணைவேந்தர் சொல்வது ஆச்சரியமாக உள்ளது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ் பல்கலைக்கழக சூழலை பல கோணங்களில், கோலங்களில் கண்டும், கலந்தும் வாழ்ந்தவரே தற்போதைய துணைவேந்தர்.

இவரது இக்கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம். முள்ளிவாய்க்கால் நினைவிடம் எவருக்கும் எந்தத் தீங்கையும் ஏற்படுத்தாமல் உறவுகளை இழந்தோருக்கு மன ஆறுதலை மட்டும் கொடுக்கும் இடமாகவே அமைக்கப்பட்டது.

அதனை அழித்தமை மிகுந்த கண்டனத்திற்கு உரியது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 195 இலங்கையர்கள் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 195 இலங்கையர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை நாடுதிரும்பியுள்ளனர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியிலிருந்து 68 பேரும், ஜப்பானில் இருந்து 50 பேரும், கட்டாரிலிருந்து 45 பேரும், மாலைதீவிலிருந்து 24 பேரும் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து 8 பேரும் இன்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்துப் பயணிகளும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

## நினைவுத் தூபி அழிக்கப்பட்ட விவகாரம்; நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் முயற்சி

### முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கண்டனம்

யாழ் பல்கலைகழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி அழிக்கப்பட்ட விடயம் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சியே என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாட்டில் யுத்தம் நிறைவுக்கு வந்த பின் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க நடவடிக்கைகள் கட்டியெழுப்பட வேண்டும். இனங்களுடைக்கிடையே புரிந்துணர்வும், நல்லிணக்கமும் கட்டியெழுப்படுகின்ற போதே நாடு நிரந்தரமான அமைதியினை நோக்கிச் செல்லும். ஆனால் துர்திஷ்டவசமாக அதற்கு மாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை வருத்தமளிக்கிறது. இது கண்டனத்திற்குரிய செயல்.

முள்ளிவாய்க்கால் நினைவு தூபி தமிழ் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயம் அது பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல. எனவே உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தெற்கில் பொது இடங்களிலும், பல் கலைகழகங்களிலும் பல நினைவு தூபிகள், சின்னங்கள் இருக்கின்றன. அவ்வாறே யாழ் பல்கலைகழகத்திலும் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுதூபியும். இவற்றை இடித்து அழிப்பது தமிழ் மக்களின் உணர்வுகளை அடித்து அழிப்பதாகும்.



முள்ளிவாக்காலில் பல்கலைகழக மாணவர்கள்,பல்கலைகழகத்திற்கு அனுமதிபெற்ற, மாணவர்கள், ஏனைய மாணவர்கள் என பலர் கொல்லப்பட்டமை யாவரும் அறிந்த விடயம். எனவே காயங்களை ஆற்றுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நினைவு தூபியை அழிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.- என அவர் தெரிவித்துள்ளார்.

# விக்னேஸ்வரனின் முன்மொழிவையும் சேர்த்துக்கொள்ள இணங்கியுள்ளோம்!

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையானது ஓர் அறிக்கையோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்ற கவலை எம்மிடம் இருந்தாலும், விக்னேஸ்வரன் தரப்பு கூறிய விடயத்தையும் சேர்த்துக் கொள்வதற்கு இணங்கியிருக்கின்றோம் எனநாடாளுமன்றஉறுப்பினர்எஸ்.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஜெனிவா விடயங்களைக் கையாள்வதற்கு ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடலின் நிறைவிலான ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த ஊடக சந்திப்பில் எஸ்.கஜேந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமை பேரவை கூட்டத்தொடரை எதிர்கொள்வது தொடர்பாக வடக்கு – கிழக்கில் இருக்கக்கூடிய சிவில் அமைப்புக்களுக்கும் தமிழ்த் தேசிய பரப்பில் செயற்படுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி விசாரணை தொடர்பாக கடந்த 8 வருடமாக மனித உரிமை பேரவையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டிராத நிலையில் அந்தப் பொறுப்பு கூறல் விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவது என்ற விடயத்தில் இணக்கப்பாடு காணப்பட்டிருக்கின்றது.

அது தொடர்பான அறிக்கையை கையொப்பம் இட்டு அனுப்புவது தொடர்பில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருக்கின்றது.

மேலும், விக்னேஸ்வரன் தரப்பினர் சர்வதேசசுயாதீனவிசாரணைபொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மனித உரிமை பேரவையினுடையவிடயம்நான்கிற்குள்இணைத்து, இங்கே கொண்டு வரவேண்டும் என்ற விடயத்தை முன்வைத்தார்கள்.

அந்தக் கருத்தானது பிரயோசனம் இல்லை எனவும் மீண்டும் பேரவைக்குள் முடக்கப்படும் என்ற கருத்தை நாம் குறிப்பிட்டு எதிர்த்து வலியுறுத்தி உள்ளோம். அந்த கருத்தை பொது சபையின் முன்னாள் கோரிக்கையாக முன்வைத்தபோது ஒரு வருடத்துக்கு உட்பட்ட கால அவகாசத்தோடு அவ்வாறு சம்மதம் தெரிவிக்க வேண்டிய நிலைமை இருந்தது.

எங்களைப் பொறுத்தவரையில் சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறை ஓர் அறிக்கையோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்ற கவலை எம்மிடம் இருக்கின்றது.

ஆனாலும் விக்னேஸ்வரன் தரப்பு அந்த விடயத்தில் பிடிவாதமாக நின்றமையால் நாங்கள் கால அவகாசத்தோடு அந்த விடயத்தையும் சேர்த்துக்கொள்வதற்கு இணங்கியிருக்கின்றோம். அது தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட பின்னர் இறுதி முடிவுகள் எடுக்கப்படும். – என அவர் குறிப்பிட்டார்.

## மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவம் நேற்று நடைபெற்றது!

யாழ்ப்பாணம் – மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர்ஆலயஇரதோற்சவப்பெருவிழாநேற்று(ஞாயிற்றுக்கிழமை) காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

மேலும் ஆலய இரதோற்சவப் பெருவிழாவில் கலந்து கொண்ட அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாகக் குறைந்தளவான மக்களே ஆலய இரதோற்சவப் பெருவிழாவில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக தியாகிகள் தினம் கொட்டகலையில் அனுஷ்டிப்பு!

மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த மலையக தியாகிகள் தினம் பெருந்தோட்டப்பகுதிகளில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்டகலை பத்தனை சந்தியில் நடைபெற்றது.

மலையக மக்களுக்கான தொழில்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப்போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளையும் நினைவு கூர்ந்து முற்பகல் 10 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வின் ஏனைய அம்சங்கள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களும், மலையக புத்திஜீவிகளும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் தியாகிகளின் உறவினர்களும் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10 ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு கடந்த 2019 டிசெம்பர் 15 ஆம் திகதி தலவாக்கலை, டெவோனில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்படியே ஜனவரி 10ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா விவகாரத்தில்

## சரியான திசை நோக்கி நாங்கள் நகர்கின்றோம்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார்.

ஜெனிவா விடயங்களைக் கையாள்கின்றமை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் கலந்துரையாடல் சரியான திசை நோக்கி செல்லும் என நம்புகின்றோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற – ஜெனிவா விடயங்களைக் கையாள்வதற்கு ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கான – கலந்துரையாடலின் நிறைவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-



தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் மத பெரியார்களை உள்ளடக்கிய ஒரு கருத்து பரிமாற்றம் கூட்டத்தில் இடம்பெற்றது.

முக்கியமாக எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை ஆணையகத்தினுடைய கூட்டத்தொடர் சம்பந்தமாகவும் அதில் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள நாங்கள் எவ்வாறு அதனைக் கையாள்வது என்பது தொடர்பாகக் கருத்துப் பரிமாற்றம் செய்திருக்கின்றோம்.

ஒரு பொது உடன்பாட்டை நாங்கள் ஏறத்தாழ எட்டியிருக்கின்றோம். அது தொடர்பாக ஓர் ஆவணம் தயாரிக்கப்படுகின்றது. அந்த ஆவணம் இதில் கலந்து கொண்ட கட்சிகளுக்கும் ஏனைய சிவில் அமைப்புக்களுக்கும் அனுப்பப்படும். அந்த ஆவணத்தில் வரக்கூடிய கருத்துக்கள், அதனைப் பார்த்து பரிசீலித்து, அது தொடர்பில் பொது முடிவு ஒன்றை நாங்கள் எட்டுவோம் என்று நம்புகின்றோம்.

ஏற்கனவே ஒரு நீண்ட கருத்து பரிமாற்றங்கள் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே இது ஓரளவிற்கு சரியான திசை நோக்கி செல்லும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.




## Leaf color chart - இலை நிறச்சுட்டி

பயிரின் நைட்ரஜன் தேவை வழங்கப்படுவதை உறுதிசெய்ய, அதிக உரப் பாவனையை தவிர்க்க, முக்கியமான வளர்ச்சி நிலைகளில் குறிப்பாக வளரும் பருவத்தில் N (நைதரசன்) உரத்தை பயன்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டியது அவசியம்

**தாவரத்தின் நைதரசனின் அளவை கண்டுபிடிப்பதற்கான முறை:-**

1) தாவரத்தின் நைதரசனின் அளவை கண்டுபிடிப்பதற்கு எளிமையான மற்றும் செலவு குறைவான முறை இதுவாகும்.

2) இலை வண்ண அட்டையில் இளம் பச்சை, கிளிப்பச்சை, அடர் பச்சை, மிக அடர் பச்சை மற்றும் மிக மிக அடர் பச்சை என ஐந்து வண்ணங்கள் உள்ளன.

3) விவசாயிகள் இந்த வண்ணங்களைப் பயன்படுத்தியே உரமிடவேண்டுமா, வேண்டாமா என தாங்களே முடிவெடுத்துக்கொள்ளலாம்.

**அளவிடும் முறை:-**

i) இலை நிறச்சுட்டியைக் கொண்டு இலையின் வண்ணத்தை ஒப்பிடும்போது சூரியவெளிச்சம் இலையில் நேரடியாகப்படாதவாறு அளவிடுபவர் நிற்கவேண்டும். இலையின் பச்சைய அளவை மதிப்பிடுவது நடவு நட்ட 14ஆம் நாளிலிருந்து அல்லது விதைத்த 21 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு வாரமும் செய்யப்படவேண்டும்.

ii)மதிப்பீடு செய்ய ஏற்ற இலை முழுதாய் வெளிவந்துள்ள இலைகளில் மேலிருந்து மூன்றாவது ஆகும். மதிப்பீடு செய்ய குறைந்த பட்சம் 10 இலைகள் இங்கும் அங்குமாக தேர்வு செய்யப்படவேண்டும். அளவிடும் காலம் பொதுவாக ஒரு பயிருக்கு ஒரு குறிப்பிட்ட நேரமாக இருத்தல் வேண்டும் (காலை 8 – 10 மணிக்குள்). அளவீடு எண் ரகத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# இன்றைய கடையடைப்புக்கு முஸ்லிம்களும் முழு ஆதரவு

## மு.கா., ரிஷாத் கட்சி ஆகியனவும் இணைவு

யாழ்ப்பாணம், ஜனவரி 10

இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறும் முழுக் கடையடைப்புக்கு முஸ்லிம் தரப்பும் பூரண ஆதரவு தர முன்வந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிப்புக்கு எதிராக ஒன்று திரள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் அறிக்கைகள் மூலம் அழைப்பு விடுத்திருக்கின்றன.

தூபி இடித்தழிப்புக்கு மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பைக் காட்டுவதற்காக இன்று முழுக் கடையடைப்புக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் முழு ஆதரவு வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிஸாம் காரியப்பர் அறிக்கை மூலம் கோரியிருக்கின்றார்.

''யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் தூபி உடைப்பு மற்றும் முஸ்லிம்களின் ஜனஸா கட்டாயப்படுத்தி எரிக்கப்படல் போன்றவை யாவையும் இந்நாட்டின் சிறுபான்மை சமூகத்தின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி அவமதிக்கும் அரசாங்கத்தின் வெளிப்பாட்டையே எடுத்துக்காட்டு கின்றன.

"இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறவுள்ள ஹர்த்தால், கடையடைப் புக்கு முஸ்லிம்களும் ஆழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்று எமது கட்சியும் கேட்டுக் கொள்கின்றது." என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

இந்தத் தூபி அழிப்புக்கு எதிராக ரிஷாத் பதியுதீன் எம்.பி. ஏற்கனவே அறிக்கை மூலம் கண்டனம் வெளியிட்டு, யாழ் பல்கலைக்கழகத் தூபி அழிப்புக்கு எதிரான சமூக இயக்கத்துடன் தமது கட்சியையும் இணைத்துக் கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம் தரப்புகளும் முழு மூச்சாக ஆதரவு தெரிவித்திருப்பதால் வடக்கும் கிழக்கும் இன்று ஹர்த்தாலால் முழுமையாகவே முடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


# யாழ். பல்கலைச் சம்பவம்; பிரி. அமைச்சர் வேதனை



யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் வேதனையளிப்பதாக பிரித்தானியா வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் அகமட் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் காட்சிகளால் வருத்தம். இலங்கையின் போரில் பாதிக்கப்பட்ட அனைவரையும் மக்கள் நினைவில் வைத்திருப்பது முக்கியம். இது கடந்த கால காயங்களை குணப்படுத்தவும் நல்லிணக்கத்தை ஆதரிக்கவும் உதவுகிறது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹக்கீமுக்கும் கொரோனா!



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவர் தற்போது தான் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை அவர் தனது டுவிட்டரில் பதிவின் ஊடாக நேற்று அறிவித்துள்ளார்.

கடந்த 10 நாள்களில் தன்னுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகயை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவுக்கும் சில நாள்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஐக்கியபட்டு இன்று ஹர்த்தால்

## ரிஷாத் பதியுதீன் எம்.பி. அறிவிப்பு



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடித்து தரைமட்டமாக்கியமையை எதிர்த்தும், சிறுபான்மைச் சமூகங்களுக்கு இந்த அரசால் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால் இடம்பெறவுள்ளது. இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் விடுத்துள்ளன.

எனவே, இன்று இடம்பெறவுள்ள இந்த ஹர்த்தாலுக்கு சிறுபான்மையினரான முஸ்லிம் சமூகமும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் சமூகங்களாக இலங்கைச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர். ஆகக் குறைந்தது உயிரிழந்தோரை நினைவுகூரவும், நல்லடக்கம் செய்யவும் சிறுபான்மைச் சமூகங்கள் மறுக்கப்படுகின்றன. இவற்றுக்குப் பின்னால் ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகள் இல்லாமலிருக்காது. இவ்வாறான செயற்பாடுகளை ஜனநாயக ரீதியில் எதிர்ப்பதற்கு சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும்.

முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தமிழ்த் தலைமைகள் குரல் கொடுத்து வருவதை நாம் மறக்க முடியாது. எமக்குள் உள்ள சிறிய சிறிய பேதங்களை மறந்து ஒன்றுபடுமளவுக்கு பேரினவாதம், சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்குவதாகவே நாம் கருதுகிறோம்.

எனவே, இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு முஸ்லிம்கள் பூரணமாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நமது நாட்டில், இந்த அரசினால் ஒடுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர் விலும் முஸ்லிம்கள் இந்த ஹர்த்தாலை ஆதரிப்பது அவசியம்.

ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகளிலிருந்து நமது சமூகங்கள் பாதுகாக்கப்படுவதற்கான உறுதியான அரசியல் அடித்தளங்கள், இந்த ஒத்துழைப்புக்களின் ஊடாக கட்டியெழுப்பப்படும் என நான் நம்புகின்றேன். - என்றார்.

# தூபியை மீளமைக்க ஏற்பாடு துணைவேந்தரே செய்வாராம்!



- எஸ். நிதர்ஷன்-

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடித்தழிக்க தாங்கள் சொல்லவில்லை என மேலிடங்களிலுள்ளவர்கள் கூறினாலும் அவர்களின் அழுத்தம் காரணமாகவே அது இடித்தழிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா, இடிக்கப்பட்ட தூபியை மீள அமைக்க உரிய நடவடிக்கைகளைத் தானே எடுப்பார் எனவும் கூறியிருக்கின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த இரண்டு தினங்களிற்கு முன்னர் இரவோடிரவாக இடித்தழிக்கப்பட்டது. இதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தூபியை பல்கலைக்கழக துணைவேந்தர்தான் இடித்ததார் எனவும், இதனை அகற்றுமாறு தாம் எந்த அறிவித்தலையும் வழங்கவில்லை எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார். அதே நேரத்தில் தூபி அகற்றப்பட்டதற்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என இராணுவத் தளபதியும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் முள்ளிவாக்கால் நினைவுத் தூபியை அகற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மீளத் தூபியை அமைக்க வலியுறுத்தியும் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இரண்டாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று நேரில் சென்று கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் பின்னர் துணைவேந்தருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதன்போது முள்ளிவாய்கால் நினைவுத் தூபியைத் தாமாகவே அகற்றவில்லை என்றும், மேலிட அழுத்தம் காரணமாகவே அகற்றினார் எனவும், அதனை அவர்கள் இப்போது மறுத்தாலும் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருக்கின்றன எனவும் துணைவேந்தர் கூறினார் என சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

மேலும் இடிக்கப்பட்ட நினைவுத் தூபியை மீள அமைப்பதற்குத் தானே நடவடிக்கை எடுப்பார் எனவும், அதாவது இத்தூபியை சட்ட ரீதியாக அமைக்கத் தான் முழு முயற்சி எடுப்பார் எனவும், இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் கோரினார் என்று சித்தார்த்தன் மாணவர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை மாணவர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரம் இருக்கின்றமை தமக்கு மிகவும் மனதிற்கு கஷ்டமாக உள்ளது எனவும், ஆகவே இடிக்கப்பட்ட தூபியை அமைக்கத் தானே நடவடிக்கை எடுப்பார் எனவும், இடிக்கும் நடவடிக்கையைத் தானாக மனப்பூர்வமாகச் செய்யவில்லை எனவும், ஆகையினால் தான் திரும்ப கட்டுவதற்கு முழுமையான முயற்சியை எடுப்பார் எனவும், இதற்கு அரசியல்வாதிகள் ஒழைத்துழைக்க வேண்டும் எனவும், துணைவேந்தர் கேட்டுக் கொண்டார் என சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார்.

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை உணர்வுடன் காலையில் நினைவேந்தல்





யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 46 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். முற்றவெளி அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக இது அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பதுபேர் படுகொலைசெய்யப்பட்டனர்.

உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் முட்டுக்கட்டை போட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அப்போதைய அரசு, பொலிஸாரை அனுப்பி இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியது எனக் குற்றம் சுமத் தப்படுகின்றது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பு அரசின் தூர நோக்கு நிகழ்ச்சித் திட்டம்!

## தமிழர் மரபுரிமைப் பேரவை கண்டனம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பு அரசின் தூர நோக்குக் கொண்ட அரசியல் நிகழ்ச்சி நிரலாகும் என தமிழர் மரபுரிமைப் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழர் மரபுரிமைப் பேரவையின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

சட்டவிரோதமாகக் கட்டப்பட்டதாக கூறி, பல்கலைக்கழக நிர்வாகம் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை ஜனவரி 8 ஆம் திகதி இரவோடிரவாக இடித்து அழித்துள்ளது.

பின் முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் சிங்கள அரசியல் சொல்லாடலை பயங்கரவாதத்தின் மீதான வெற்றி என்று கூறி தமிழினப் படுகொலையை மறுத்து வந்துள்ளது.

இன்று பதினொரு வருடங்கள் முடிந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அகற்றுவதென்பது அரசின் ஒத்த அரசியல் சொல்லாடலைத் தக்க வைப்பதோடு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்வதுமாகும்.

தமிழினப் படுகொலை சொல்லாடலை அரசு மிகத் திட்டமிட்டு தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் அகற்றி வருவது என்பது சிங்கள – பௌத்த அரசின் தூர நோக்குக் கொண்ட அரசியல் நிகழ்ச்சி நிரலாகும்.

தமிழினப் படுகொலையில் இறந்த மக்களை நினைவு கூருவது தமிழ் மக்களின் கூட்டுரிமை சார்ந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுப்பதற்கு சிங்கள – பௌத்த அரசு வருடாவருடம் முயன்று வந்தமை தமிழினம் அறிந்த வரலாறு.

தமிழினப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கு அரசியல் வெளியை நிராகரித்து, சிங்கள அரசு நல்லிணக்கத்தை, சமாதானத்தை முன்னெடுப்பது அபத்தமும், முரண்பாட்டுத் தன்மை கொண்டதுமாகும்.

பதினொரு வருடங்கள் கழிந்த நிலையிலும் உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு தயாரற்ற நிலையில் உள்ள அரசின் நிலைப்பாடு, சிறிலங்கா சிங்கள – பௌத்தர்களுக்கானது என்ற பேரினவாத அடிப்படைவாத மகாவம்ச மனநிலையில் முதலீடு செய்கின்றதோடல்லாமல் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கை தமிழ்த் தேசிய நீக்கம் செய்கின்றது.

தமிழினத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கெதிராக யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையை பிரதிபலிக்கின்ற, பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறுவனமாக இருந்து வந்துள்ளதென்பது, கல்விக்கும் யதார்த்தத்திற்குமிடையேயுள்ள உறவைப் புரிந்து வந்துள்ள பண்பாட்டை யாழ். பல்கலைக்கழகம் பாரம்பரியமாகக் கொண்டது.

தமிழின ஆக்கிரமிப்பிற்கெதிரான, தமிழின விடுதலை சார்ந்து சிந்திக்கின்ற பாரம்பரியத்தைத் தாயகத்தில் தக்கவைத்துக் கொள்கின்ற நிறுவனமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் விளங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தை தமிழ்த் தேசிய நீக்கம் செய்கின்ற நடவடிக்கைகளை சிங்கள – பௌத்த அரசு செய்து வருவதென்பது தெரியாத விடயமுமல்ல.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தேறிய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பென்பது வன்மையாகக் கண்டிக்கப்படுவதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் கொண்டிருக்கின்ற தமிழின விடுதலை சார்ந்த பண்புகளைத் தமிழ்த் தேசிய அடையாள நீக்கம் செய்வதாகும்.

இந்தச் சூழமைவில்தான் முன்னாள் துணைவேந்தரின் பதவி நீக்கமும், கலாநிதி குருபரன் (சட்டத்துறை மேலாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) மீது பிரயோகிக்கப்பட்ட அரசியல் அழுத்தத்தையும் உற்று நோக்க வேண்டியிருக்கும்.

மிக அண்மையில், தற்போதைய பொதுஜன பெரமுன தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் முன் கொணரப்பட்ட தமிழினப்படுகொலை வாரம், சட்டவரைவு மூலம் சிறிலங்காவின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும். அது முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தமை முக்கியத்துவம் அற்றது அல்ல என நிராகரித்து விட முடியாது.

சிங்கள – பௌதத் ஏகாதிபத்திய அரசு தமிழினத்தை அடக்குமுறைக்குள்ளாக்குவதற்கு கல்வி நிறுவனங்களையும், தனக்குட்பட்ட ஒட்டு மொத்த அரசு இயந்திரத்தையும் பயன்படுத்துகின்றது – அரசு, இயந்திர நிகழ்ச்சி நிரல்களிலிருந்து அதற்கான நியமனங்கள் வரை– என்பது மிகத்தெளிவாக உணர்த்தப்பட்டுவிட்டது.

வெவ்வேறு அரச திணைக்களங்களுக்கூடாக, தொல்லியல், வனவளத்துறை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தமிழ் நிலங்களையும் தமிழ் மரபுரிமைச் சின்னங்களையும் இல்லாதொழிப்பது அல்லது திரிவுபடுத்துவது என்கின்ற அரசியல் நிகழ்ச்சி நிரலை, ஆயுத மற்ற போராக வடக்கு – கிழக்கில் ஒட்டுமொத்த தமிழினம் மீது சிங்கள – பௌத்த அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

2009 இற்குப் பின்னர் ஆயுதமற்ற போரை வடக்கு – கிழக்கில் கட்டவிழ்த்த சிங்கள – பௌத்த அரசு தொடர்ந்தும் தமிழினத்தை அடக்கு முறைக்குள் வைத்துக் கொண்டு சிங்கள – பௌத்த ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்தி தமிழினத்தின் கூட்டுரிமைகளை ஈழத் தமிழ் அடையாளம் சார்ந்து மறுத்து, நிராகரித்து, மீறி வருவதென்பது சிங்கள – பௌத்த அரசு தனது அரசியல் நிகழ்ச்சி நிரலிலிருந்து மாறவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

ஒட்டுமொத்த தமிழினமும் கூட்டாக சிங்கள – பௌத்த அடக்குமுறைக்கெதிராக எழுச்சி கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்றது. அந்த வரலாற்றுக் கடமை எம் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பல்கலையின் சுயாதீனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடித்து அழிக்கப்பட்ட நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக சூழலில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் சம்பவங்களும் பல்கலைக்கழக ஆசிரியர்களாகிய எங்களை மிகவும் மனவேதனைக்குட்படுத்தியிருக்கின்றது.

எமது பல்கலைக்கழத்தின் மீது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வருகின்ற அழுத்தங்கள் பல்கலைக்கழகத்தின் சுயா தீனம் மற்றும் தனித்துவம் என்பவற்றை வெகுவாகப் பாதிக்கின்றமை ஆசிரியர்களாகிய எங்களை மேலும் கவலைக்குட்படுத்துகின்றது. இது தொடர்பான மேலதிக விடயங்கள் தொடர்பாக விசேட பொதுக் கூட்டத்தில் கலந்துரையாட உள்ளோம். – என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விபத்தில் சிக்குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இழந்து, வீதியை விட்டு விலகி அருகிலுள்ள மின் கம்பத்தில் மோதுண்டே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இராணுவ வீரர் பொலன்னறுவைப் பகுதியைச் சேர்ந்த ரத்ன குமாரா (வயது – 36) என்பவர் ஆவார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவர் மின்னேரியா பகுதியில் உள்ள இரா ணுவ முகாமில் பணியாற்றி வருகின்றமை தெரியவந்துள்ளது.

அவரது சடலம் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோ தனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு –**
**மின்னஞ்சல் –**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் –**
**076 443 8622**

# நினைவுத் தூபி இடித்தழிப்பு அரசின் பாசிசகர செயற்பாடு!

## தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை கண்டனம்

*யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகளால் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை ஸ்ரீலங்கா அரசு பாசிசகரம் கொண்டு தனது முகவர்கள் மூலம் உடைத்து தகர்த்துள்ளது.*

*- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கவீகரன் நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-*

*இந்தச் செயல் என்பது உலகத் தமிழர்களின் இதயங்களில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*இக் கொடூர செயலுக்கு துணைபோன யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் செயல் என்பது உலகத் தமிழ் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் ரணத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*இந்த மா பாதகச் செயலை புரிந்த ஸ்ரீலங்கா அரசு மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர் மீதும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றது.*

*இவ் விடயம் தொடர்பாக இரு கோரிக்கைகளுடன் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இருக்கும் யாழ் பல்கலை மாணவர்களுக்கும், போராட்டத்திற்கு துணைநிற்கும் அனைத்து கட்சிகளுக்கும், பொது அமைப்புகளுக்கும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் அனைத்து கட்சிகளின் பூரண ஹர்த்தாலுக்கு முழு ஆதரவை வழங்குகின்றது.*

*மேலும் இதுவரை கண்டனங்களை பதிவுசெய்த புலம்பெயர் அமைப்புக்களும், தொப்புள்கொடி உறவான தமிழக தலைவர்களும் எமது மாணவர்களால் முன்னேடுக்கப்பட்ட அறவழிப்போராட்டத்திற்கு தொடர்ந்தும் துணைநிற்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.*

*தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை உலகத் தமிழர்களின் அறவழிப் போராட்டங்களுக்கு துணை நிற்கும். - என்றுள்ளது*

### மெய் நிகர் ........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**குழுநிலை வகுப்பறைகள்**

ஓர் ஆசிரியர் ஒரு பெரிய வகுப்பை சிறிய குழுக்களாக பிரிக்க விரும்பினால், குழுநிலை (பிரேக்அவுட்) அறைகள் உதவுகின்றன. ஆசிரியர் சிறிய குழு திட்டங்கள், விவாதங்கள் அல்லது பிற கற்றல் நடவடிக்கைகளுக்காக மாணவர்களைப் பிரிக்க இது உதவுகின்றது. குழுநிலைச் செயற்பாடு நிறைவடைந்ததும் ஆசிரியர் பின்னர் ஒரு பெரிய விவாதத்திற்கு முழு வகுப்பையும் மீண்டும் உருவாக்க முடியும்.

**வினாடி வினாக்கள்**

ஒரு மெய்நிகர் வகுப்பறை அமைப்பில் வினாடி வினாக்கள் கேட்பதற்கான வசதிகள் உள்ளன. ஆசிரியர் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் மெய்நிகர் வகுப்பறையை உயிர்த்துடிப்போடும், எல்லோரதும் பங்களிப்போடும் செயல் இயக்கத்தில் வைத்திருக்க இந்த வசதி உதவுகிறது. அதன்வழி ஆசிரியர்கள் மாணவர்களின் புரிதலை அளவிடுவதற்கு வழி கிடைக்கிறது. சில தயாரிப்புகள் வினாடி வினா தரவை மேலும் பகுப்பாய்விற்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கின்றன.

**கை உயர்த்துவது**

பொதுவாக வகுப்பறைகளில் மாணவர்கள் கையையுயர்த்தி பதிலளிக்கும் வழக்கம் உண்டு. அதே வசதி மெய்நிகர் வகுப்பறையிலும் உண்டு. மாணவன் ஒரு கேள்வி எழுப்பும்போது அல்லது பேச விரும்பும் போது, ஒரு கை உயர்த்தும் பொத்தானை அழுத்தினால், அவரது கை உயர்த்தல் ஆசிரியருக்கு புரியும். ஆசிரியர் அதற்கான வாய்ப்பை வழங்குவார்.

நிஜவகுப்பறையின் உணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை மெய் நிகர் வகுப்பறை கொண்டுள்ளது. இதற்காக பல செயலிகள் இணைய உலாவியில் கிடைக்கின்றன. இந்த செயலிகளை மூலம் இலவசமாகவும் பணம் கட்டியும் பெற்றுக் கொள்ள முடியும். மெய்நிகர் வகுப்பறையை உருவாக்கக்கூடிய வெவ்வேறு செயலிகளை அடுத்து வரும் தொடர்களில் அறிமுகம் செய்யலாம்.

(மிகுதி அடுத்த திங்கள் தொடரும்...)

# நினைவுரிமையை மறுப்பதற்கு பல்கலை மாணவர் கண்டனம்

## ஹர்த்தாலுக்கு ஆதரவும் கோருகின்றனர்

இன்றைய ஹர்த்தாலை ஒட்டி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு:

முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பது தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் உச்சமாகும். அது பல்லாயிரக்கணக்கில் அப்பாவி பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டதன் கூட்டு நினைவாக தமிழ் மக்களது உணர்வுகளில் கலந்துறையும் ஒரு விடயமாகும். அதன் காரணமாக 2018ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தில் அதற்கான நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டது. அது வெறுமனே கல்லாலும் மண்ணாலும் அமைக்கப்பட்ட ஒரு கட்டடம் அல்ல. மாறாக மாணவர்களதும் ஒட்டுமொத்த தமிழ் மக்களதும் உணர்வுகளின் உறைவிடமும் நினைவுகளின் நீட்சியுமாகும்.

அது அமைக்கப்பட்ட நாளிலிருந்தே பேரினவாத சிறீலங்கா அரசின் கண்களை உறுத்தி வந்துள்ளது. அமைக்கப்படும் பொழுதே பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அமைக்கப்பட்ட பின்பும் அதனை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அது மாணவரதும் மக்களதும் உணர்வுகளோடு கலந்த ஒரு விடயமாக காணப்பட்டதால் அவ்வாறு அகற்றுவது முடியாத விடயமாக அமைந்திருந்தது.

இந்நிலையில் கடந்த எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு பொழுதில் இரகசியமாக பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இந்நினைவிடம் அழிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா பேரினவாத அரசின் கைக்கூலிகள் போல யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும் நிர்வாகமும் செயல்பட்டிருப்பது நமக்கு ஆழ்ந்த விசனத்தை தருகிறது.

இச்செயல் பல்கலைக்கழக மாணவர்களை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அவமதிக்கும் செயலாகும். மேலும் ஒரு மக்கள் இனத்துக்குரிய நினைவு கூரும் உரிமையை நிராகரிக்கும் செயலும் ஆகும்.

எனவே யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் பல்கலைக்கழக நிர்வாகத்தின் இந்த அநீதமான நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழ் மக்களது உரிமைகளுக்காக தொடக்கத்திலிருந்தே குரல் கொடுத்து வந்த யாழ் பல்கலைக்கழக சமூகம். அவர்களது உரிமைகளுக்கு எதிராக இவ்வாறு செயற்பட்டிருப்பது அனைவரதும் கண்டனத்துக்குரியது.

ஆகவே யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் தனது தவறை திருத்தி பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் ஒன்றை மீளவும் அமைக்க முன்வர வேண்டும்.

எமது கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையிலும் நினைவுத்தூபியை மீளவும் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மாணவர்களாகிய நாம் பல்வேறு தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது சில மாணவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் நாளைய( இன்றைய) நாளில் வடக்கு கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இதற்கு வர்த்தக சங்கங்கள் போக்குவரத்து கழகங்கள் உட்பட அனைவரும் பூரண ஒத்துழைப்பு தருமாறு வேண்டி நிற்கின்றோம்.

தமிழ்தேசிய நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் பொதுமக்களும் எமது இந்த நினைவுரிமைக்கான போராட்டத்தில் கரம் கொடுக்க வேண்டுமென அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம். - என்று உள்ளது.

## மட்டு.நகர வர்த்தக நிலையங்களை 4 நாள்கள் மூடுவதற்குத் தீர்மானம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை 4 தினங்களுக்கு அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களைப் பூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு 25 பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

மாவட்ட அரசாங்க காரியாலயத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற மாவட்ட கொரோனா செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

இன்று அகில இலங்கை ரீதியாக பாடசாலைகள் திறப்பது சம்பந்தமாக ஏற்கனவே கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் உட்பட வலயக்கல்வி பணிப்பாளர்களை அழைத்து கூடியபோது அதற்கிணங்க தனிமைப்படுத்தப்பட்டுள்ள காத்தான்குடி பிரதேசத்திலுள்ள 25 பாடசாலைகளைத் தவிர ஏனைய அனைத்து பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படும்.

எதிர்வரும் வாரம் பொங்கல் வாரமாக இருப்பதால் கடைகளில் அதிகமாக பொதுமக்கள் கூடுவதால் கொரோனாத் தொற்று ஏற்பட அதிகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இதனடிப்படையில் நேற்று ஞாயிற்றுக்கிழமையில் இருந்து எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வரை பாமசி, குறோசறி, பொதுச்சந்தை, உணவகங்கள் ஆகிவற்றை தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, உணவகங்களில் இருந்து சாப்பிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், எடுத்துச் செல்ல மட்டும் அனுமதி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரு நைஜீரியப் பிரஜைகள் கல்கிசை பகுதியில் கைது!

கல்கிஸை பகுதியில் உரிய விசா இன்றி சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்தமைக்காக இரு நைஜீரியப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் சுற்றுலா விசாவில் நாடடுக்கு வந்துள்ளனர் எனவும், உரிய விசா இல்லாமல் நீண்ட காலமாக இலங்கையில் தங்கியிருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பல நைஜீரியர்கள் இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பான பல்வேறு குற்றங்களில் ஈடுபடுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.01.2021 இல் வெளியிடப்பெற்றது.